May 1934

No. 5

# செங்குந்த மித்திரன்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே




255
256
60
62
64
9
272
273
... 274
... 276
... 279
... 281
ல் மிக்க திறமை வாய்ந்த இரு குருடர் .... 283
தேசிக் காட்சியில் சர்க்காவில் நூ ... 287
கூட்டம் ... 288
... 289
பி. செ. மாணிக்கவாசக ... ,,
:—தி. நா. சபாபதி மு ... 290
ப் பந்தயம் நட .... 297


ங்கப் பரி

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0

### சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தை) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினால் சந்தா நெம்பரைக் குறித்து இங்கிலீஷ் மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விட வேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

### விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இ
ழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்
ரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவு
த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்
கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ்

க்கு முழுப்பக்கம் ரூ. 8

கால்பக்கம் ரூ.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசக முதலியார்.


| | | |
|---|---|---|
| தொகுதி—அ | பவ௵ வைகாசி௴ | பகுதி ௫ |


## உள்ளடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 27 JUL 1934 MADRAS


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ... 238 |
| நினைவுக் குறிப்புகள் | ... 243 |
| சுந்தரத்தின் கட்டுரை | ... 253 |
| வைத்தியப் பகுதி | ... 255 |
| சிவகாமி—சிதம்பரனார் | ... 256 |
| விகடத் துணுக்குகள் | ... 260 |
| சமூக சீர்திருத்தமும் தொழில் தேர்ச்சியும் | ... 262 |
| அடைபட்ட பூதம் | ... 264 |
| விழுந்துவிட்டார்! வேலு முதலியார் | .... 269 |
| வாழ்க்கையின் சிறப்பு என்ன? | .... 272 |
| இந்திய மாதர்கள் தற்கால நிலைமை | ... 273 |
| மானவஸீக தபால் | ... 274 |
| சந்தேகப் பத்தர் | ... 276 |
| அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! | ... 279 |
| கதம்ப விநியோகம் | ... 281 |
| செங்குந்த யாத்திரைவாசி | .... 283 |
| நமது தபால் பெட்டி | ... 287 |
| சங்கம், கல்விநிதிகளின் நிர்வாக சபைக் கூட்டம் | ... 288 |
| மதிப்புரை | ... 289 |
| கல்வி அதிகாரி அறிக்கை | ... ,, |
| வர்த்தமானம் | ... 290 |
| அரை வார்த்தைகள் போட்டிப் பந்தயம் | .... 297 |

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

அதிருங் கழல்ப ணிந்து னடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலும மர்ந்த பெருமாளே.

—அருணகிரிநாதர்.

## கைத்தறி நெசவுத்தொழில் பாதுகாப்பு

கைத்தறி நெசவுத் தொழிலானது இந்தியாவின் புராதனத் தொழிலாகும். அதன் மேன்மையினைக் கண்டே பழையகாலத்தில் பல தேசத்தவர்களும் இந்தியாவுடன் வர்த்தக உறவு கொண்டாடினர். பண்டைக் காலத்தில் அநேக தேசங்கட்கு ஆடைகளை வழங்கியது நமது தேச மூதாதையர்களே யாவர். இரு நூற்றாண்டு காலத்திற்கு முன்பிருந்தே ஏற்பட்டு வரும் பலவகைப் போட்டிகளையும் சமாளித்துக்கொண்டு இன்றுவரை உயிருடன் இருந்து வரும் அதன் தன்மையொன்றே அத்தொழி லின் அவசியத்தினையும் மேன்மையினையும் வலியுறுத்தும். என்றா லும், அபரிமிதமாய் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் போட்டிகளை யாதொரு பாதுகாப்பு மின்றி இனி சமாளித்துச் செல்வது சற்றும் முடியாத தென்பதை கைத்தறி நெசவுத் தொழிலாளர் கள் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்களைப் பார்த்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

‘செய்யுந் தொழிலையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்கினொரு
நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை’

என சிறப்பிக்கப்பெற்று பல வகுப்பினராலும் விருப்பத்துடன் கையாளப்பெற்ற நெசவுத்தொழில், பரம்பரையாக நெசவுத் தொழில் புரிந்துவரும் வகுப்பினர்களாலேயே இன்று புறக்கணிக் கப்படும் நிலைமையினை அடைந்திருப்பதை தேசமக்க ளனைவரும் [illegible] கவனிக்க வேண்டுகிறோம். ஒரு நாளைக்கு இரண்டணா கூலி [illegible]த்தொழிலில் கிடைக்காததால் பரம்பரை நெசவாளர்



களில் அநேகர் கூலி வேலை செய்து பிழைக்கும் கருத்துடன் தமது ஊர்களினின்றும் வெளிக்கிளம்பிவிட்டனர். இராமநாத புரம், திருநெல்வேலி தென்னாற்காடு முதலிய, ஜில்லாக்களி லிருந்து நெசவுத்தொழிலை விட்ட பலர், தினந்தோறும் நமது காரியாலயத்திற்கு வந்து ஏதேனும் சொற்ப வருமானமுள்ள வேலையாவது பார்த்துத் தரவேண்டுமெனக் கேட்கும் பரிதாப நிலையினை நம்மால் சகிக்கக்கூடவில்லை. இந்த நிலையினை மேலும் அநுமதித்துக்கொண்டே போனால் தறித்தொழிலே இந்தியாவில் அடியோடு மறைந்தொழியு மென்பதில் சந்தேக மில்லை. இதன் அழிவைத்தடுக்க யாதொரு முயற்சியும் செய்யாமல் கதரபி விருத்திக்குப் பாடுபடுவதும், தேசீய புணருத்தாரணத்திற்கும் குடிசைத்தொழில் அபிவிருத்திக்கும் உழைப்பதாகப் பொது ஜனத் தலைவர்கள் கூறுவதும், நெசவுப் பாடசாலைகளும், கைத் தொழில் இலாகாவும் வைத்து அரசாங்கத்தார் நடத்துவதும் பயனற்றதும், பொதுமக்களின் கண்களைத் துடைப்பதுமான செயலெனவே கூறுவோம்.

இவைகள் முற்றும் பயனற்றவை என்பது எமது கருத் தன்று. கதர் எத்தனையோ ஏழைகளின் உயிரைக்காத்துவரும்



நூல் நூற்பதில் திறமை வாய்ந்த இரு குருடர்கள் பம்பாயில் நட[ந்த] கண்காட்சியில் சர்க்காவில் நூற்கும் காட்சி

சஞ்சீவியாக இருக்கிற தென்பதையும், சுதேசாபிமானம் அநே
கர் உள்ளத்தில் ஏற்பட்டிருப்பதனாலேயே கைத்தறிகளில் உற்
பத்தியாகும் சரக்குகள் ஒருவாறு செலவாகி வருகின்றனவென்
பதையும் நாம் நன்கு அறிவோம். என்றாலும், கைத்தறி நெசவு
போன்ற தேசியத்தொழில்கள் அடியோடு அழிந்த பின் இவைக
ளால் யாதுபயன் என்பதே எமது கருத்து.

ஸ்ரீ நாகேஸ்வரராவ் பந்துலுகாரு சென்னையில் சமீபத்தில்
செய்த பிரசங்க மொன்றில் 'நமது நாட்டுப் புராதனத் தொழில்
கைத்தறி நெசவுத் தொழிலாகும். அதனை அழியவிடும்படி எவ
ரும் பார்த்துக்கொண்டிருப்பது தகாது. இந்திய ரனைவரும்
அதனை உடனே பாதுகாக்க முனைதல் வேண்டும். இல்லையேல்
இந்திய நாகரீகமே சிதறியதாகும்' எனக் குறிப்பிட்டிருப்பது
இங்கு கவனிக்கத்தக்கது.

ஆனால், தேசத் தலைவர்களையும் அரசாங்கத்தையும் நம்பி
நெசவாளர்கள் உறங்குவராயின் அவர்கள் மோசம்போனவர்
களேயாவர். தின வெடுத்தவ னன்றோ சொரிந்து கொள்ளவேண்
டும். ஒருவனுக்குத் தினவெடுக்க மற்றவன் சொரிவான் என
எதிர்பார்ப்பது முட்டாள்தன மல்லவா?

நெசவுத் தொழிலாள ரனைவரும் தமது தொழில் பாது
காப்பிற்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய காலம் இதுவே
யாகும். 'நெசவுத் தொழில் புரியும் எல்லா சமூகத்தவர்களு
மடங்கிய ஒரு மகாநாட்டைத் தாமதமின்றிக் கூட்டி, அகில இந்
திய நெசவுத் தொழிலாளர் சங்கம் நிறுவுவதற்கு அடுத்து வரும்
தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டில் அஸ்திவாரம்
போடப்படுமாயின் மகாநாடு சிறந்த தொண்டாற்றியதாக அனை
வராலும் போற்றப்படு மாதலின், அதனைப்பற்றி செங்குந்தத் தலை
வர்கள் ஆழ்ந்து யோசிக்கவேண்டும்' என, கடந்த பங்குனி மாத
மித்திரனில் நாம் குறிப்பிட்டிருந்ததை நேயர்கள் அறிவார்கள்.

ஐந்தாவது மகாநாடு நடப்பதில் காலதாமதம் ஏற்பட்டு
வருவதைக் கருதி 7-5-34-ந் தேதி கூடிய தென்னிந்திய செங்
குந்த மகாஜன சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில், நெசவுத்
தொழில் புரியும் எல்லா சமூகத்தவர்களோடும் இது பற்றி
கடிதப் போக்கு வரத்து நடத்தவேண்டுமென முடிவு செய்திருப்
பதாக அறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறோம். சங்க அமைச்ச
ரவர்கள் சிறிதும் தாமதமின்றி இவ் வேலையைத் தொடங்குவார்
களென எதிர்பார்க்கிறோம். இவ்விஷயத்தில் செங்குந்தர்களும்,
நெசவுத் தொழில் புரியும் ஏனைய சமூகத்தவர்களும் தத்தம்மா
ன்ற முயற்சியை மேற்கொள்வரெனப் பூரணமாய் நம்பு



## கல்வி இலாகாவும், செங்குந்தர்களும்

'செங்குந்தர்' என்பதும் 'கைக்கோளர்' என்பதும் நமது
சமூகத்தைக் குறிக்கும் இரு பெயர்களாகும். ஆனால்,
பாடசாலைகளில் நமது வகுப்பு மாணாக்கர்களுக்கு அரைச் சம்ப
ளம் அனுமதிக்க வேண்டுமென்ற அரசாங்க உத்தரவில் 'கைக்
கோளர்' என்று மட்டும் குறிக்கப்பட் டிருப்பதால் 'செங்குந்தர்'
என மனுவில் குறிப்பிடும் மாணவர்களுக்கு சில பாடசாலைகளில்
அத்தகைய உதவி மறுக்கப்படுவதாக அறிகிறோம்.

1930-ம் ஆண்டில் செங்கற்பட்டு ஜில்லாவில் இதேமாதிரி
மறுக்கப்பட்டதால் செங்கற்பட்டு ஜில்லா கல்வித்தலைவர் அவர்
களுக்கு இரு பெயர்களும் நமது சமூகத்தையே குறிப்பிடுவன
வென்பதை நமது தலைச்சங்க அமைச்ச ரவர்கள் எடுத்துக்
காட்டியதின்மீது, அந்த ஜில்லாவிலுள்ள எல்லா உயர்தர பாட
சாலைகளுக்கும், ஜில்லா போர்டாருக்கும் கல்வித் தலைவரவர்கள்
ஒரு அறிக்கையை அனுப்பி யிருக்கிறார்கள். அதில், இரு பெயர்
களும் ஒரே சமூகத்தைக் குறிப்பதால், செங்குந்தர் எனக்குறிக்
கும் மாணவர்களுக்கும் அரைச் சம்பளம் அனுமதிக்குமாறு தெரி
விக்கப்பட் டிருக்கிறது. அந்த அறிக்கையை மற்றோரிடத்தில்
பிரசுரித்திருப்பதை வாசகர்கள் படித்துப் பார்க்குமாறு விரும்பு
கிறோம்.

இதேமாதிரியான அறிக்கையை எல்லா ஜில்லாக்களுக்கும்
அனுப்பும்படி சென்னை மாகாண கல்வி அதிகாரி அவர்களை
(Director of Public Instruction, Madras) சங்க அமைச்சர்
கேட்டுக்கொண் டிருக்கிறார். பாடசாலைகள் திறப்பதற்குள் எல்
லாப் பாடசாலைகளுக்கும் அது கிடைக்குமாறு கல்வித் தலைவ
ரவர்கள் செய்து விடுவார்களென நம்புவதால், அரைச் சம்பளம்
அனுமதிக்கும் விஷயத்தில் எங்காவது தொந்தரவு ஏற்படுமானால்
உடனே சங்க அமைச்சருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்
கொள்ளுகிறோம்.

## கீழ்நாட்டுத் தான்தோன்றி ரட்சகர்கள்

ஜப்பானுக்குப் பேராசை பிடித்துவிட்டது. 'ஊருக்கு இளைத்
தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பார்கள். சீனா
சிறிது தளர்ந்திருப்பதை சாதகமாகக் கொண்டு, அது ஒரு சுதந்
திர நாடு என்பதையும் மறந்து, ஜப்பான் தன் ஆதிக்கத்தை அங்கு
வீசப் பார்ப்பது ஒழுங்கற்ற செய்கையாகும்.

சீனாவிட மிருந்து மஞ்சுகூ பிரதேசத்தைப் பிடுங்கி, அதனைத்
தனி நாடாகச்செய்து, பழைய நாடிழந்த சக்கரவர்த்தியை




ரஷியக் கழுகும், அமெரிக்கப் புலியும், பிரிட்டிஷ் கரடியும், சைனுச் சிங்கமும் மஞ்சூரியக் குழந்தையை விழுங்க விரும்புகின்றனவாம். ஆனல், ஜப்பான் மனிதன் அதைக் காப்பாற்றி வருகிறனம்.

—ஜப்பானின் தற்பெருமை.

ராக்கி விட்டது. தான் அதன் ரட்சகரென்றும், மஞ்சுகூவிடம் எவரும் எட்டிப்பார்க்கக் கூடாதென்றும் கூறி வருகிறது. இதைப்பற்றி சீன சர்க்கார் சர்வதேச சங்கத்தினிடம் முறையிட்டுக்கொண்டும் யாதொரு பயனும் ஏற்படவில்லை. மஞ்சுகூவின் பிற்காலத் தலைவிதி எவ்வாறு எழுதப்பட்டிருக்கிறதென்பதை இப்போது நாம் சோதிடம் கூறுவதற்கில்லை. ஆனல், மஞ்சுகூ விஷயமாக சீன செய்துகொண்ட முறைப்பாட்டில் சர்வதேச சங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத காரணத்தால், இன்று ஜப்பான் தன்னைமீறி எந்த தேசத்தவரும் சீனவுக்கு' உதவி புரியக் கூடாதென்ற ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அவ்வறிக்கையில்,

> ‘கீழ் நாடுகளில் அமைதியை நிலை நிறுத்தும் பொறுப்பு ஜப்பானைச் சேர்ந்தது; சீனவில் அமைதியை உண்டாக்கும் பொறுப்பு சீனவைச் சேர்ந்தது. சீனவுக்கு எந்த தேசத்தவர்களும் ராணுவக் கப்பல்களோ, ஆகாய விமானங்களோ, கடன் தொகையோ, யுத்தப் பயிற்சி செய்விக்க ராணுவ நிபுணர்களோ கொடுக்கக்கூடாது. அவ்வாறு கொடுத்தால் கீழ்நாட்டு அமைதியைக் கெடுப்பதாகக் கருதப்பட்டு அப்படிச் செய்த வல்லரசுகளையும், கீழ்நாடுகளுக்கு விரோத[illegible]தால் சீனவையும் ஜப்பான் எதிர்க்க நேரும்’

# நினைவுக் குறிப்புகள்

## சனதனிகளின் மிருகத்தனம்

ஏப்ரல் மாதம் 26-ந் தேதி இரவு 2-15 மணி. அஹிம்ஸா மூர்த்தி—அருளாளர்—காந்தியடிகள் ஜாஷிடி ஸ்டேஷனில் இறங்கினர். ஐயனைத் தரிசிக்கும் ஆவலுடன் பல்லாயிரக் கணக்கில் பொதுமக்கள் கூடியிருந்தனர். கண்ணுக் கெட்டிய தூரமும் ஜனக் கூட்டம் தாங்கமுடியாது நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கூட்ட மிகுதியினல் மகாத்மாவின் மோட்டாரில் தாக்கர் பாபுவும் ஏற முடியவில்லையாம். இப்பெருஞ் சமுத்திரத்தினிடையே ஒரு துளி நீரை யொத்த சில சனதனப் பேய்கள் தலைவிரித் தாடியது வியப்பாகவே இருக்கிறது.

முப்பது பேருக்கும் குறைவான இந்த சனதன அட்டைகள், அஹிம்ஸா மூர்த்தியிடம் தங்கள் மூர்க்கத் தனத்தைக் காட்டத் தொடங்கியது மிகவும் பேடித்தனமான செயலேயாகும். தீன்புருவாய்—அஹிம்ஸாதேவராய்பாபுஜி இருந்ததனலன்றோ இந்தப் பேடிகள் அப்பெருங் கூட்டத்தில் தலைகாட்ட முடிந்தது. அன்று அவர்கள் உயிருடன் தப்பியது ஐயன் ஆணைக் கடங்கிய மக்கள் மனே நிலையின லன்றோ? இல்லையேல் இந்த முப்பது ஆன்மாக்களும் சட்டினி யாவதில் சந்தேகமுண்டோ?

தங்களுக்குத் துன்பம் நேர மகாத்மா அனுமதிக்க மாட்டாரென்ற துணிச்சலின லன்றோ, பண்டித லால்நாதரும் அவரது கோஷ்டியாரும் மகாத்மாவோடு பிரயாணஞ் செய்துகொண்டே ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி, ‘காந்தியின் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்த நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை’ எனக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டஞ் செய்து வந்தனர். இந்த அழுக்கு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்று குறிப்பிட்டிருக்கிறது. கீழ்நாடுகளில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பை ஜப்பானுக்கு வழங்கியது யார்? இப்படித் தான்தோன்றி ரட்சகராய் ஜப்பான் புறப்படக் காரணமென்ன? சீனவைத் தன்னிஷ்டம்போல் நடக்க விடாமல், சில நிபந்தனைகளின் பேரில் எல்லா உதவிகளையும் தன்னிடமே பெற்றுக் கொள்ள வேண்டுமென ஜப்பான் வற்புறுத்துவதில் ஏதேனும் விசேடம் இராதென நினைப்பதற்கில்லை. எப்படியேனும் கீழ்நாடுகளில் தான் ஒரு ஏகாதிபத்திய நாடாக விளங்க வேண்டுமென்பது அதன் ஆசையா?

முட்டைகளின் கூச்சலைப்பற்றி எவரும் கவலைப்படவில்லை. ஆனால் ஜாஷிடி ஸ்டேஷன் வந்ததும் இவர்கள் செய்த அடாத செயலைக் கண்டு உண்மை மதாபிமானிகள் எவரும் தலை குனியாதிருக்க முடியாது.

ஐயனின் அன்பர்களாகிய ஒரு பெரிய சமுத்திரத்தினிடையே இருந்த இந்தச் சிறுதுளி சனாதன அட்டைகள் கற்களையும் தடிகளையும் மகாத்மா ஏறி இருந்த மோட்டார் மீது வீசினவாம். அதனால் மோட்டாரின் பின்புறமுள்ள கண்ணாடி உடைந்து காந்திஜியின் பக்கத்தில் விழுந்ததாம். சில தொண்டர்களுக்குக் காலிலும் கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டனவாம். சில சனாதனிகள் மோட்டார் மீது பாய்ந்து சக்கரங்களில் தொத்திக் கொண்டிருந்தனராம். அவர்களை ஜனங்கள் அப்பால் இழுத்துவிட்டனராம். இல்லையேல், இவர்களால் காந்திஜிக்கு ஏதாவது துன்பம் நேர்ந்திருக்குமென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. 'நான் ஒரு விபத்திலிருந்து தப்பினேன் என்பதில் சந்தேகமில்லை' என மகாத்மாஜி கூறுவதிலிருந்து இது உறுதியாகின்றது.

இந்த வெறுக்கத் தக்க—அறிவற்ற—கோழைத்தனமான செய்கையால் மகாத்மாவின் மனத்தை மாற்றிவிட முடியுமா? உயிருக்கே ஊறு நேர்வதானாலும் அவர் தமது தீர்மானத்திலிருந்து சிறிதேனும் பிசகுவாரோ? இச்சம்பவத்தின்பின், 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்' என்று மகாத்மாஜி வீர முழக்கம் செய்வதைப் பார்த்து சனாதனிகள் தமது அடாத செயலுக்காக வெட்கப்பட வில்லையாயின், அவர்கள் உடம்பில் இரத்தஞ் செத்துவிட்டதென்றே தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது. இந்தக் கொடிய சம்பவம் நடந்த சிறிது நேரத்தின்பின் நடந்த பொதுக்கூட்டத்தில் காந்திஜி கூறிய பேச்சு அவரது உறுதியான உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது. அதனை அப்படியே கீழே தருகிறோம்.

“பலாத்காரத்தினால் மதம் ஓரிடத்திலாவது முன்னேற்றமடைந்ததில்லை. எனவே, பலாத்காரத்திலிருந்து இனி என்னைப் பாதுகாக்க எத்தகைய முறைகளையும் கைக்கொள்ள வேண்டாமென நான் ஆதி இந்து தொண்டர்களுக்குக் கட்டளையிடுகிறேன். இவ்விடத்திலிருந்து எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நான் நடந்து செல்லத் தயாராக இருக்கிறேன். சனாதனிகள் விரும்பினால், அவ்விதம் நான் நடந்து செல்லும்போது என்னைக் [illegible]ன்றுவிடலாம். ஆதிஇந்து முன்னேற்ற இயக்கத்தை நடத்[illegible] செல்லுவதற்கு நான் மாத்திரந்தான் பொருப்பாளி.



எனவே, அவ்விஷயமாக யாருடைய மண்டையாவது உடைய வேண்டுமாயின், முதலில் என் மண்டைதான் உடைய வேண்டும். எனக்கு இறைவனிடம் பூரண நம்பிக்கை இருக்கிறது. என்னுடைய ஸ்தூல உடலுக்கு அந்த ரக்ஷை போதும். வேறு பாதுகாப்பு எதுவும் எனக்கு வேண்டாம். என்னைக் கொல்ல வேண்டுமென இதுவரை 5, 6 தடவைகளில் என்னை எதிர்த்திருக்கிறார்கள். அவைகளிலிருந்தெல்லாம் நான் தப்பித்துக்கொண்டிருக்கிறேன். தெரிந்தோ தெரியாமலோ, எவரும் எந்த க்ஷணத்திலும் மரணத்திற்குத் தயாராக இருந்து வரவேண்டி யிருக்கிறது. எனவே, என்னைக் கொன்றுதான் தீருவதென இருப்பவரின் மடியில் சந்தோஷத்துடன் தலையைச் சாய்க்க நான் தயாராக இருக்கிறேன். ஆனால், எவருடைய மிரட்டலுக்காகவும் நான் ஒருபோதும் ஆதி இந்து முன்னேற்ற இயக்க விஷயமாக எனக்குள்ள கொள்கையைக் கைவிடமாட்டேன்.”

ஒரு சனாதனியிடமாவது எனக்குக் கோபமில்லை. எந்த சனாதனிக்கும் அவரவர் சாஸ்திரங்களிலிருந்து தெரிந்துகொண்டதற்கிணங்கி பிரசாரம் செய்ய சுதந்திரம் உண்டு. இந்து சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு விரோதமாக ஆதாரமெதுவு மில்லையென எந்த சனாதனியாவது காட்டும்பட்சத்தில் எனக்கு மிகுந்த திருப்தி யேற்படும். கடவுள் எல்லோரையும் சமமாகவே சிருஷ்டித்திருக்கிறார். எனவே, ஒவ்வொரு ஆதி இந்துவுக்கும் ஆலயங்களில் பிரவேசிக்க உரிமை யுண்டு. ஆனால் பலாத்கார முறையால் அவ்விதம் செய்யக்கூடாது. பலாத்காரத்தைக் கைக்கொள்வதில் எனக்குச் சிறிதும் நம்பிக்கை யில்லை.

இந்த சம்பவத்தின் பின், காந்திஜி இனி நடந்து சென்றே தமது ஹரிஜனப் பிரசாரத்தை நடத்துவதென்று தீர்மானித்து ஒரு சிறு கோஷ்டியுடன் புறப்பட்டுள்ளார். தினந்தோறும் காலை $5\frac{1}{2}$ மணிமுதல் 7 மணிவரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலுமாக 8 மைல் தூரம் கால் நடையாக நடந்து செல்கின்றார். அவ்வாறு நடந்து செல்வதே பண்டைக்கால பிரசார முறை என்றும், சமயாசாரியர்கள் காலத்தில் கட்டை வண்டிகள் இருந்தும் அதில் அவர்கள் ஏறியதில்லை என்றும், தாம் மோட்டாரில் ஏறிச் செல்வது சனாதனிகளுக்குத் 'மிரண்ட மாட்டுக்குச் செகப்புத் துணியைக் காட்டுவது' போலிருக்கிறதென்றும் கூறியுள்ளார். மண்டையை உடைக்க விரும்புவோர்க்குத் தயக்கமின்றி சாய்த்துக் கொடுக்கத் தயாராக இருக்கு[illegible] உயிர்த்தியாகியிடம் இந்தக் கோழைகள் அட்டகாசஞ் செ[illegible] கேவலம் உயிரற்ற செயலே யாகும்.

குலாம் காதர்களின் குளறல்

'எவன் எக்கேடு கெட்டாலும் தன் வயிறு ஒன்று நிரம்பினால் போதும்' என்பது அநேக மேதாவிகளின் கொள்கை. இந்தக் கொள்கையில் வெற்றி யுறுவதற்குத் தமது மானத்தை விற்கவோ, தம்மைச் சேர்ந்தவர்களுக்கு இழிவைக் கற்பிக்கவோ, தமது சகோதரர்களைக் காட்டிக்கொடுக்கவோ இவர்கள் சற்றும் பின்னடைவதில்லை. ஸ்ரீ ரகுபிரசாத் திரிவேதி அவர்களும், சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரவர்களும் இந்த கோஷ்டியில் சேர்ந்தவர்களென்பதை சமீபத்தில் அவர்கள் செய்த உபதேசங்கள் தெரிவிக்கின்றன. அவ்வுபதேச மொழிகள் தங்கள் அரசியல் தெய்வங்களைத் திருப்தி செய்து தமது வயிற்றப்ப தேவருக்கு எக்காலத்தும் பஞ்சம் நேராதபடி பாதுகாத்துக் கொள்வதற்காகச் செய்யப்பட்டனவே யன்றி வேறல்ல. ஸ்ரீ திரிவேதி அவர்கள் ஆக்ரா சப் ஜட்ஜ்; சர். சி. பி. அவர்கள் திருவாங்கூர் அரசரது ஆலோசனையாளர். இருவரது மூளைகளும் சட்டத்திலேயே சதா புரண்டு எழுவன. சட்ட புத்தகங்களைக் கரைத்துக் குடித்ததில் இருவருக்கும் மூளையில் ஏதோ சிறிது கோளாறு ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீ திரிவேதி சமீபத்தில் ஒரு வழக்கை விசாரித்துத் தீர்ப்பு கூறும் போது,

> 'ஆங்கிலோ இந்தியர் நம்மை ஆளும் ஜாதியாருடன் நெருங்கிய சம்பந்தம் உடையவர்கள். ஆகவே, அவர்களுக்கு அதிக மதிப்பு உண்டு. ஆளப்படுவோராகிய இந்தியரைக் காட்டிலும் அவர்கள் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள். அவர்களை அடிப்பது பெரிய குற்றம்'

என்று தமது தீர்ப்பில் குறிப்பிட்டாராம். இந்தத் தீர்ப்பைக் கேட்டு வருந்தாத இந்தியர் இல்லை. அதைக் கண்டிக்காத அறிஞர் இல்லை. அவருடன் சகபாடிகளா யுள்ள நீதிபதிகளெல்லாம் அதனைக் கண்டிக்கின்றனர். 'திரிவேதி தீர்ப்பில் காணப்படும் இக் குறிப்பினால் நீதி மன்றங்களின் கௌரவமே பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது' என உயர்தர நீதிபதிகளின் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறதாம். 'லீடர்' என்ற பத்திரிகையின் குறிப்பு இங்கு கவனிக்கத் தக்கது.

'ஸ்ரீ திரிவேதியின் மூளையில் ஒரு ஆணி கழன்றிருப்பதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரியில் படுக்கை காலியாக இல்லாமற் போனாலும் இத்தகைய நம்பகமான, மதிப்புக்குரிய உத்தியோகஸ்தனை சர்க்கார் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. தங்கள் வைத்திய இலாகாவில் உடனே அவருக்குச் சிகிச்சை செய்யத் தரவிட வேண்டுகிறோம்.'



சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரவர்கள் நமது ராஜதானியைச் சேர்ந்தவர். சென்னை, அட்வகேட் ஜெனரலாகவும், சட்ட அங்கத்தினராகவும் இருந்து தனது வரம்பு கடந்த சட்ட ஞானத்தினால் பார்ப்பன ரல்லாதாரும், ஜஸ்டிஸ் இயக்கமும் முன்னேறுதபடி இயன்றவரை குழி பறித்து வந்தவர். இவர், கும்பகோணம் அக்ரகாரத்தில் செய்த பிரசங்கம் இந்தியர்களைத் திடுக்கிடச் செய்திருக்கிற தென்பதில் ஐயமில்லை. அவர் கூறியதாவது:—

"ஜவஹர்லால் நேரு ஒரு பெரிய அபாயமான மனிதர். அவர் பாமர ஜனங்களின் பிரதிநிதி யன்று. அவருடைய திட்டம் எல்லா வழியிலும் தீமை விளைவிக்கக்கூடியது." இது தான் சர். சி. பி. யின் அமுத வாக்கு. இந்த வேண்டா உபதேசத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும்—ஏன், ஒவ்வொரு எழுத்திலும் சுயநலந் தாண்டவ மாடுகின்ற தென்றே கூறலாம். தேசபக்தரும்,




ஸ்ரீ ஜவஹர்லால் நேரு யாருக்கு அபாயகரமானவர் ?

தியாக மூர்த்தியும், கள்ளங்கபடமற்ற உண்மை வீரரும், ஏழை பங்காளரும், பாமரர் போற்றும் அன்பருமாகிய ஸ்ரீ ஜவஹர்லாலை யன்றி வேறு யாரைக் காட்டிக்கொடுத்தால் வெகு விரைவில் பெரிய ராஜபக்தராகக் கூடும்?

ஸ்ரீ ஜவஹர்லால் பாமரர்களுக்கு அபாயகரமானவரன்று. சர். ஸி. பி. போன்ற ராஜபக்தர்களுக்கு அபாயகரமானவர்தான். சுயநலவாதிகள் இவரைப் பார்த்தால் பனைமரமாயினும் பாய்ந்து ஏற வேண்டியவர்களே. மிதவாதிகளும் வைதீகர்களும் மரங்களில் பதுங்கிச் சாக வேண்டியவர்களே. முதலாளிகள் முள்ளையும் கல்லையும் பார்க்காது விழுந்தடித்துக்கொண்டு பாறைகளினிடையே பதுங்க வேண்டியவர்களே. இவர்களையெல்லாம் பயங்கரப்படுத்தி விரட்டியடிக்கும் ஸ்ரீ ஜவஹர் சிங்கம் தொழிலாளிகளை முத்தமிடும். உண்மைத் தேசாபிமானிகளைக் கண்டால் அன்புடன் கூடி விளையாடும். பாமரர்களுக்குப் பரிவுடன் உதவி புரியும். இத்தகைய சிங்கம் இன்று கூண்டில் இருக்கிறது. அதை விடுதலை செய்ய வேண்டுமெனப் பலர் சர்க்காரை வற்புறுத்திக் கோருகிறார்கள். இந்த சமயத்தில் சர். ஸி. பி. தமது அடாத உபதேசத்தை வெளியிட்டது மிகவும் அருவருக்கத் தக்க செய்கை என்றே எண்ணுகிறோம்.

## கும்பகோணத்தின் கோணல் புத்தி

சர். ஸி. பி. யின் மூளையின் திறமை கும்பகோண அக்ரகாரத்தில் வெளியானது போன்று, ஸ்ரீ சத்திய மூர்த்தியின் ராஜீய ஞானமும் அதே இடத்தில் வெட்டவெளிச்சமானது குறிப்பிடத்தக்க ஓர் சம்பவமாகும். இருவருக்கும் மூளைக் கோளாறு ஒரே இடத்தில் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க அது கும்பகோணத்தில் கால் வைத்ததின் பயனாக இருக்குமெனக் கருதுகிறோம்.

சர். ஸி. பி. யும், எஸ். சத்திய மூர்த்தியும் தங்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ சீர்திருத்தவாதிகளாயிருக்கிறார்கள். கும்பகோணமோ பெரிய வைதீகக்கோட்டை. அங்கே பேச்சு எப்படி இருக்க வேண்டுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீ சத்திய மூர்த்தியின் கட்சிக் கொள்கையோ, அல்லது அவரது சொந்த சீர்திருத்தக் கொள்கையோ அங்கு சிறிதும் பயன்படாது. ஆனால், அதனை அடியோடு எதிர்த்துப் பேசுவதால், வரப்போகும் தேர்தலில் தாம் ஒரு மந்திரி பதவியைப் பெறப் போவதாகக் கனவு கண்டு, அதற்காகவே ஓராண்டாக மனப்பூர்த்தியாய் ஓடியாடி உழலும் தனக்கு ஆதரவு ஏற்படுவது துர்லபம். இந்த 'இருதலைக்கொள்ளி எறும்பு' நிலையில் அகப்பட்டுக் கொண்டு திரு திரு என்று விழிக்கும் ஸ்ரீ சத்திய மூர்த்தி 'பாம்புக்கும் தோழன், மீனுக்கும் காவல்' என இருந்து, தேர்தல் வரை காலங் கழிக்கலாமென நினைத்து அதற்கேற்றபடியே எல்லா விடங்களிலும் பிரசங்கம் செய்து வருகின்றார்.



14-4-34ந் தேதி கும்பகோணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ சத்திய மூர்த்தி தனது சுயராஜ்யக் கட்சியின் கொள்கையை அதே முறையிலேதான் வழவழா கொழகொழா வென ஒருவாறு சொல்லி முடித்தார். ஆனால், கும்பகோணம் தன் கோணலைக் காட்டிவிட்டது. கூட்டத்தின் முடிவில் ஸ்ரீ திருவேங்கடத் தய்யங்கார் கேட்ட கேள்வி சத்திய மூர்த்தியை சந்தியில் இழுத்து வைத்துவிட்டது. 'ஆலயப் பிரவேச மசோதாவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்பதே அவரது கேள்வி. சத்தியமூர்த்தி சற்றும் சளைக்கவில்லை. வைதீகர்கள், சீர்திருத்த வாதிகள் இருவரையும் இரு கைகளால் அணைத்துக் கொள்ள எண்ணி 'ஆலயங்களில் எல்லா இந்துக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம். ஆனால், இவ் விஷயத்தில் சட்டம் செய்யக்கூடாது. சாரதா சட்டத்திலும் 14 என்று வயது நிர்ணயம் செய்திருப்பது தவறு. 12 என்று இருக்கவேண்டும்.' என்று பதில் கூறினாராம்.

பதில் சற்று பொருத்த மற்றதென நினைக்கிறீர்களா? என்ன செய்வது! ஆலயங்களில் எல்லா இந்துக்களுக்கும் சம உரிமை வழங்கவேண்டுமென்பது தன் அபிப்பிராயம் என சீர்திருத்த வாதிகளைத் திருப்தி செய்யக் கூறிய வார்த்தைகள் 'வெறும் வார்த்தைகள், அவ்வாறு நான் செய்யமாட்டேன். நானும் ஒரு வைதீகனே' என்பதைக் காட்டிக் கொள்வதற்காக சாரதா சட்டத்தையும் அவர் வலிய இழுத்துக்கொள்ள வேண்டியவரானார். கேள்வியில் சாரதா சட்டத்தைப்பற்றி இல்லாவிட்டாலும் தானே வலிய இழுத்துக்கொண்டதின் காரணம் உங்களுக்கு இப்போது விளங்கிவிட்ட தல்லவா?

புதிதாய்ச் சீர்திருத்த சட்டங்கள் ஏற்படுவதற்கு மட்டும் ஸ்ரீ சத்திய மூர்த்தி முட்டுக்கட்டையாக இருக்கமாட்டார்; பழைய சீர்திருத்த சட்டங்களை உடைத்தெறிவதிலும் கவனம் செலுத்துவதில் பின்னடைய மாட்டாரென்பது இதனால் தெளிவாய் விளங்குகிறது. வரப்போகும் தேர்தலில், ஓட்டர்கள் இத்தகைய ஏமாற்றுத் திருவிழா நடத்திவரும் சத்திய மூர்த்திகளிடம் சர்வ ஜாக்கிரதையாயிருக்குமாறு எச்சரிக்கிறோம். சீர்திருத்த சம்பந்தமான தம் கொள்கைகளை அவர்கள் வெளியிடாத வரையில் அவர்களை ஓட்டர்கள் ஆதரிப்பது தேசத் துரோகமென்றே கருதுகிறோம்.

## கூற்றுவன் விருந்து

பவ ஆண்டு பிறந்து சில தினங்களே ஆயின. கூற்றுவனுக்கு இதற்குள் ஒரு பெரு விருந்து கிடைத்து விட்டது. இதுவரை,

இத்தமிழ் நாட்டில் இத்தகைய விருந்தை அவன் உண்டதில்லை. இந்த சித்திரை மாதத்து விருந்தில் இரு நியாயவாதக் களஞ்சியங்களை உண்டான். ஒரு டாக்டர் திலகத்தைத் தின்றான். ஒரு தர்ம தாதாவை ருசி பார்த்தான். ஒரு சங்கீத சாகரத்தைப் பருகினான்.

சித்திரை மாதம் 12-ந் தேதி உதயத்தில் சர். இஸ்மெயில் சேட் அவர்களை மதனபள்ளி ஆரோக்கிய ஆச்சிரமத்திலும், பிற்பகல் $2\frac{1}{2}$ மணிக்கு சர். ஸி. வி. குமாரசாமி சாஸ்திரியாரை தண்டையார் பேட்டையிலுள்ள அவரது பங்களாவிலும், $3\frac{3}{4}$ மணிக்கு டாக்டர் S. ரங்காச்சாரியாரை அவரது பங்களாவிலும், மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சர். ஸி. சங்கரன் நாயரை அவரது மாப்பிள்ளையாகிய சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ மாதவன் நாயரது பங்களாவிலும் கூற்றுவன் விருந்துண்டான்.

ஒரே நாளில் நான்கு தமிழ்நாட்டுப் பேரறிஞர்களை விலாப் புடைக்கத் தின்று, அந்த ருசி மயக்கத்தில் கிடந்துழன்ற கூற்றுவன், தனக்குள்ள நீர் வேட்கையைத் தணித்துக் கொள்வான் போன்று சங்கீத சாகரம் ஸ்ரீ நயினாப்பிள்ளையின் உயிரையும் 21-ந் தேதி குடித்து விட்டான். ஒரே ஹைகோர்ட்டில் நீதிபதிகளாக இருந்த இருவர், ஒரே ஊரில், ஒரே நாளில் உயிர் துறப்பதையும், அவர்களுக்கு வைத்தியம் செய்துவந்த ஒருவரும் அதே தினத்தில் அவர்களோடு உயிர் நீத்துச் சென்றதையும் கேட்கும் எவரும் 'இது உண்மையில் நடந்ததன்று; ஓர் புனை கதையே' என மயங்கக்கூடும். தமிழ்நாட்டில் ஒவ்வொரு துறையிலும் கீர்த்தி வாய்ந்து, அவ்வத் துறைகளின் அரசர்களாய்த் திகழ்ந்த ஐந்து பிரமுகர்களை ஒரே மாதத்தில் இழந்தது தமிழ்நாட்டுச் சரித்திரத்திலேயே மிகவும் தடித்த எழுத்தில் பொறிக்கத்தக்க ஓர் சம்பவமாகும்.

இவ்வைந்து பிரமுகர்களில் சர். சி. வி. குமாரசாமி சாஸ்திரியார் சிறந்த சட்டஞானமும், சமஸ்கிருத பாண்டித்தியமும் வாய்ந்தவர். இவர் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் நீதிபதியாகவும், சிடி சிவில் கோர்ட் நீதிபதியாகவும், செஷன்ஸ் நீதிபதியாகவும் படிப்படியாக உயர்ந்து கடைசியில் சென்னை ஹைகோர்ட் நீதிபதியானார். தமது உத்தியோகத்தைக் காப்பதில் கண்ணுங் கருத்துமா யிருந்ததைத் தவிர அவரது 64 வருட வாழ்நாளில் பொதுஜன வாழ்க்கையின் மோகம் அவருக்குச் சிறிதும் இருந்ததாகத் தெரியவில்லை. 1930-ம் ஆண்டில் உத்தியோகத்தி லிருந்து விலகிய பின்பும் பொது நல சேவையில் அவர் கலந்து கொள்ளா திருந்ததைக் கவனிக்கும்போது, எந்தக் காலத்திலுமே



208445 600 008

அவருக்குப் பொதுஜன வாழ்க்கையில் ருசி தட்டியதில்லை [illegible]பது நன்கு விளங்குகிறது.

ஆனால், சர். சங்கரன் நாயரின் வாழ்க்கை இதற்கு முற்றும் மாறுபட்டது. கர்ப்பத்தில் கருவாகத் தரித்த அன்றே பொது நல சேவையின் ருசி அவரது ரத்தத்தில் கலந்துவிட்டது. தனது வாழ்நாளில் அவர் அநேக கழகங்களில் கலந்து உழைத்துள்ளார். அவர் சிறந்த அரசியல் ஞானம் படைத்தவர். தீவிர சமதர்மக் கொள்கையினை உடையவர். தமக்கு நியாயமெனப் பட்ட வழியில் நடப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும் சிறிதும் சளைக்காது—எவ்வளவுபேர் நிந்தித்தாலும் கொஞ்சமும் அஞ்சாது முன்னேறிச் செல்லும் உண்மையும் உறுதியும் ஆண்மையும் படைத்த நெஞ்சினர்.

1857-ம் ஆண்டு தோன்றிய அவர் சென்னை ராஜதானிக் கல்லூரியில் பயின்று, சட்டக் கல்லூரியில் தேர்ச்சியுற்று, ஹைகோர்ட் வக்கீலாகப் பதிவு செய்துகொண்ட சில ஆண்டுகளில் அவரது இடைவிடா உழைப்பின் பயனால்—நியாயம் நிறைந்த உள்ளம் படைத்ததின் பெருமையினால் பப்ளிக் பிராசிகூடராகி, அட்வகேட் ஜெனரலாகி, ஹைகோர்ட் நீதிபதியு மானார்.

உத்தியோகத்தி லிருந்து விலகியபின், சென்னை சட்டசபை அங்கத்தினராகப் பல ஆண்டுகள் இருந்தார். ராஜாங்க சபையிலும், இந்தியா மந்திரி சபையிலும் வைசராய் நிர்வாக சபையிலும் அங்கம் வகித்து மிக்க நேர்மையுடன் நடந்து கொண்டார். பாஞ்சாலத்தில் நடந்த ஜலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டு மனஞ் சகியாது உடனே வைசராய் நிர்வாக சபை அங்கத்தினர் பதவியை உதறித் தள்ளிவிட்டு வெளியேறினார். அமராவதியில் நடந்த தேசிய காங்கிரசுக்குத் தலைமை வகித்தார். இந்தியர்களுக்குள் இருக்கும் ஜாதிப் பிரிவுகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் தொலைக்க பல்லாண்டுகளுக்கு முன் சமூக சீர்திருத்த சங்கங்களைத் தென்னிந்தியாவில் தோற்றுவித்தவர் சர். சங்கரன் நாயரே யாவர். இவர் எவ்வளவோ உயரிய அந்தஸ்தும் பதவிகளும் வகித்தா ரென்றாலும் எந்தக் காலத்திலேனும் இவரிடம் சிறிதேனும் டாம்பீகத்தைக் கண்டதாக எவரும் கூற முடியாது. இவர், மக்களின் வாழ்க்கைக்கோர் இலக்கியமாய்த் திகழ்ந்தாரெனக் கூறுதல் மிகையாகாது.

டாக்டர் எஸ். ரங்காச்சாரியாரை அறியாத இந்தியர் எவரும் இரார் என்பது நிச்சயம். அவரைப்பற்றி பாமர ஜனங்கள் பற்பல கதைகள் கூறுவதுண்டு. தலையைத் தனிப்படுத்தி, மண்டையோட்டைப் பிளந்தெடுத்து, மண்டைப் புழுக்களை

யெல்லாம் எடுத்து விட்டு மீண்டும் தலையைப் பொருத்தி யிருக்கிறாரெனப் பலர் கூறுவதுண்டு. இது கட்டுக்கதையே யாயினும் வைத்தியத்தில் அவருக்கிருந்த மதிப்பை நன்கு விளக்குகின்றது. சத்திர சிகிச்சையில் இந்தியாவில் இணையற்ற வைத்தியராய்த் திகழ்ந்த இவர் இந்தியாவின் பல இடங்களுக்கும் தாமதமின்றிச் சென்று வருவதற்காகச் சொந்தத்தில் விமான மொன்றும் வாங்கி யிருந்தார். 1905-ம் ஆண்டு, முதன் முதல் சிறிய உத்தியோக மேற்று, சிறிது சிறிதாக உயர்ந்து, முடிவில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியின் சர்ஜனாக விளங்கினார். அவர் உத்தியோகத்திலிருந்தபோதும் சரி, 1926-ம் வருடம் அதிலிருந்து விலகிய பின்பும் சரி, ஏழைகளிடம் அவர் காட்டிய கருணையை எவரும் மறக்க முடியாது. எமன் வாயில் சிக்கிய அநேகரது உயிர்களை மீட்டு, எமனுக்கு அவ்வப்போது தோல்வியை உண்டாக்கி, வெற்றி யனைத்தையும் தம்முடையதாகவே செய்து கொண்டாரென்னும் பொறாமையினாலேயே இவரது உயிரை இவ்வளவு விரைவில் எமன் கவர்ந்தா னென்றே கருதுகிறோம்.

சர். இஸ்மெயில் சேட் ஓர் தர்ம தாதா. ஏழைகளின் நண்பர். பெருங் கொடையாளி. அநேக ஆஸ்பத்திரிகளும் பாடசாலைகளும் அமைத்த புண்ணிய புருடர். இவர் தென்னிந்தியாவில் பிரபல வர்த்தகரும், பாங்கரும், மில் சொந்தக்காரருமாவர். எப்போதும் பொதுக் காரியங்களில் கலந்துழைக்கும் சுபாவம் வாய்ந்தவர். இவர் மைசூரில் வர்த்தக சங்கத் தலைவராகவும், சந்தனாதித் தைல தொழிற்சாலை, சர்க்கரைக் கம்பெனி, கூட்டுறவு நில அடமான பாங்கி இவைகளின் டைரெக்டராகவும், பத்ராவதி இரும்பு தொழிற்சாலையின் முக்கிய பங்காளராகவும் இருந்தார்.

மிக்க விலைமதிக்க முடியாத இந்நான்கு ஆன்மாக்களை ஓரே நாளில் உண்டது போதாதென அடுத்த ஒன்பதாம் நாளில் சங்கீத உலகத்தின் சக்கரவர்த்தி—கர்நாடக ராகத்தின் காப்பாளர்—நமது நண்பர் ஸ்ரீ நாயனாப் பிள்ளையின் உயிரையும் குடித்து விட்டான். இவரது வாழ்க்கையின் நுட்பம் அடுத்த மாதம் குறிக்கப்பெறும்.

---

## ஸ்ரீ அருணகிரி நாதர் திருநட்சத்திரம்

### (ஆனி மூலம்)

நிகழும் பவ ஆண்டு, ஆனிமாதம், 12-ம் நாள் (26-6-34) செவ்வாய்க் கிழமை வருகின்றது.

அத்திருநாளைச் செங்குந்த ரனைவரும் மிக்க சிறப்பாகக் கொண்டாடுமாறு வேண்டுகிறோம்.

## சுந்தரத்தின் கட்டுரை

(பால்யன்)

அடே யப்பா! அவனுக்கு ரொம்ப கெர்வம். என்னமோ அவன் எழுதியதை செங்குந்த மித்திரன் ஆசிரியர் எடுத்துக் கொண்டாராம். எப்போதும் அவன் வாயில் அதுவே பேச்சு. "உனது கட்டுரை நன்றாய் இருக்கிறது. வருகிற சஞ்சிகையில் பிரசுரிக்கிறோம்" என்று ஆசிரியர் எழுதியதை என்னோடு அநேகம் பேருக்குக் காட்டி இருப்பான்; பக்கத்து வீட்டு விமலாவிற்குக் கூட.

எனக்கோ ஆச்சரியம் மூக்கு வாயெல்லாம் பொங்கியது. நானும் சுந்தரமும் ஒரே காலேஜில் வாசித்தவர்கள். காலேஜ் மேகஸீன் இது வரை அவன் எழுதிய பல கட்டுரைகளில் ஒன்றையேனும் பிரசுரிக்கவில்லை. இப்போது செங்குந்த மித்திரன் ஆசிரியரோ அதை ஏற்றுக் கொள்வது என்றால்............?

நான் சுந்தரத்தைப் பார்த்து, "என்ன சுந்தரம்! எதைப்பற்றி எழுதியிருக்கிறாய்? ரகஸ்யமாக மூடு மந்திரம் போல வைத்திருக்கிறாயே!" என்றேன்.

அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்து விட்டுச் சும்மா விருந்தான். இது எனது ஆசையை அதிகமாக்கியது.

"என்னடா இவன் என்னமோ எழுதிவிட்டானாம்; நமக்குக் கூடச் சொல்லக் கூடாதாம்" என்று முணுமுணுத்துக் கொண்டே மறுபடியும் "என்ன! ரசமான சிறு கதையா, அல்லது கட்டுரையா?" என்றேன்.

"ஏன்! இன்னும் வளர்த்திக்கொண்டே போயேன்," என்று சொல்லிவிட்டுக் கம்பி நீட்டினான்.

* * *

ஏழெட்டு நாட்களுக்கு அப்புறம் ஒருநாள் சாயந்திரம் பார்க் வழியாக உல்லாசமாக உலாவிக் கொண்டே போனேன். சுந்தரத்தை அங்குச் சந்தித்தேன்.

"கட்டுரையாளரே! ரஸமான-மைசூர் ரசத்தை விட ரஸமான கதையாளரே! உனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். பத்திரிகைக்கு விஷயம் எழுதுவது கிள்ளுக் கீரை யல்ல; நான் பலமுறை பல பக்கங்கள் எழுதிக் கிழித்துக் கிழித்து எறிந்திருக்கிறேன். நீ எழுதியதை செங்குந்த மித்திரனே பிரசுரிக்கப் போகிறானென்றால்..............? என்றேன்.

சுந்தரத்தின் தற்பெருமைக் கண்கள் என்னை ஒருவாறு உற்று நோக்கிப் புன்முறுவல் பூத்தன. "எல்லோருக்கும் எழுத முடியுமா? எல்லாரும் எழுதியதெல்லாம் பிரசுரிக்கப்பட்டால் ஸ்பெஷலாக

அதற்கென்றே வரம் வாங்கி வந்திருக்கிறவர்களின் மதிப்புதான் என்ன?'' என்றான். ''உண்மையாகவேதான்,' அந்த சக்தி பிறப்பிலேயே வந்தாலொழிய பயனில்லை. உனக்கு அந்த சக்தி பிறப்பிலேயே அமைந்திருப்பது பெரிய அதிர்ஷ்டந்தான். ஆனால் காலேஜ் சஞ்சிகை உன் சக்தியை அறியாமற் போனதுதான் விந்தை.''

''பத்திரிகைக்கு எழுதுவது ஒரு கலா பாத்திரம். அதுவும் செங்குந்த மித்திரன் ஹை ஸ்டான்டர்டு அல்லவா மெயின்டெயின் பண்ணுகிறது''—அதற்குள் நான், ''ஆமாண்டா! நீ பிறக்கும்போது நல்ல தமாஷ் கட்டுரையும், ஜாலிக் கதைகளும் எழுதும் சாமர்த்தியத்தைக் கொண்டுவந்திருக்கே! நான் என்ன செய்வது'' என்றேன்.

* * *

நாட்கள் ஒவ்வொன்றாய்க் கழிந்து பதினைந்தாந் தேதி வந்தது. அடுத்த நாளை ஆவலுடன் எதிர் பார்த்தேன். மித்திரனும் வந்து சேர்ந்தான். பிரித்துப் பார்த்தேன். என்னை தூக்கி வாரிப் போட்டது. சுந்தரத்தின் பெயரே தென்படவில்லை. ''என்ன! சுந்தரம் பெயரைக் காணோமே'' என்று சொல்லிக்கொண்டே பக்கத்து வீட்டு விமலாவும் வந்தாள்.

''புனைபெயர் பூண்டிருக்கலாம். வா போய் விசாரிப்போம்'' என்று குடல் தெரிக்க அவன் வீட்டிற்கு விமலாவுடன் ஓடினேன்.

அவன் தனது அறையில் உட்கார்ந்து கொண்டு அப்போதுதான் டெலிவரி செய்யப்பட்ட ஒரு லெட்டரைப் பிரிப்பது கண்டேன். படித்த பிறகு மிகப் பணிவுடன் அதை என்னிடம் கொடுத்தான். அதில் கீழ்க்கண்டபடி எழுதப்பட்டிருந்தது.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
சென்னை **15-4-34**

அன்பார்ந்த ஐயா!

'பாஸ்கரனின் படாத்துயர்' என்ற கட்டுரை எழுதியவருக்கு அனுப்பவேண்டிய 'கங்கிராசுலேஷன் லெட்டரை' உமக்கு அனுப்பிய தவறுதலுக்காக வருந்துகிறோம். உமது கட்டுரை பிரசுரிக்கக் கூடிய மாதிரியி லில்லை. அதைத் திருப்பி யனுப்ப வேண்டுமாயின் ஸ்டாம்பு அனுப்பவும். பிரசுரிக்கப் படாமைக்காகத் தாங்கள் படாத் துயர் படவேண்டாம். ''முயற்சி........கூலி தரும்.'' நமது வாழ்த்து.

ஆசிரியர்.

''பத்திரிகைக்கு எழுதுவது நீர் பிறப்பிலேயே கொண்டு வந்த சக்தி அல்லவா? அதனை எங்கே தொலைத்து விட்டீர்'' என்றேன்.

பாவம்! அப்போது அவன் முகம் சாய்ந்தது. வாடி வருந்திய கண்கள் என்னை நோக்கின; பற்கள் உதடுகளைக் கடித்துக்கொண்டன.

''ஆ! செங்குந்த மித்திரன் ஆசிரியர் உனது வல்லமையை உணராதது ஆச்சரியமே!'' என்றாள் விமலா.

சுந்தரம் வாய்திறக்க வேண்டுமே!

---

# வைத்தியப் பகுதி

## சகல நோய் சஞ்சீவி

வல்லத்துக்கிட்டம், இரும்பு அரபொடி, காந்தம் இம் மூன்றையும் சமனிடையாகச் சேர்த்திடித்து, ஒரு பாத்திரத்தில் எலுமிச்சம் பழச் சாறு விட்டு அதில் போட்டு ஒருநாள் ஊறியபின் கழுவி எடுத்து, புதிய மண் சட்டியில் வைத்து, கொல்லருலையில் வைத்து ஊதி, சட்டியும் மருந்தும் பழுக்கக் காய்ந்தபின் பசுவின் மூத்திரத்தை அதன்மேல் விடவும். இப்படி பத்துமுறை காய்ச்சி பசுவின் மூத்திரத்தை விட்ட பின் இடித்து பவுடராக்கிக் கொண்டு, கரிசலாங்காணி, குப்பைமேனி, சீந்தில் கொடி, நாகப்பழம் அல்லது பட்டை, பொன்னாங்காணி, எலுமிச்சம் பழ மிவைகளின் சாற்றால் தனித்தனி அறைத் துலர்த்திக் கொண்டு, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சீரகம், இவைகளில் வகைக்குப் பலம் ஒன்று வீதம் சேர்த்துப் புளிமாதுளம் பழச் சாற்றால் மறுபடி அறைத்துத் தேன் கலந்து மெழுகுபோல் வைத்துக்கொண்டு காலை மாலை ஒரு சுண்டக்கா யளவு வீதம் சாப்பிட்டு வரவும். பால், நெய், மோர் முதலியன அதிகமாய்ச் சேர்த்துக் கொள்ளவும். நல்ல ஆகாரம் உட்கொள்ளவும். 48 நாள் தொடர்ந்து சாப்பிட்டால், பித்தவாயு, குன்மம், குடல்வாயு, க்ஷயம், காசம், பீனிசம், பாண்டு, நீசாகை, காமாலை, சூதகபந்தம், சூதக பாண்டு முதலிய சகல வியாதிகளும் குணமாகி அபரிமிதமான இரத்த விருத்தியும் தேக பலமும் உண்டாகும். ஆங்கில வைத்தியப் பற்று நிறைந்த நவீனர்களும் இதைத் தயார் செய்து உபயோகித்து, இந்திய மருந்துகளின் அரிய செயலையும் எளிய செலவையும் உணருமாறு வேண்டுகிறோம்.

* * *

## நேத்திர ரோக நிவாரணி

சகாதேவி என்கிற தேவகந்தி சமூலம் இடித்துப் பிழிந்த சாறு படி 2, பால்படி 2, எண்ணைபடி 1, இதில் கிராம்பு, சுக்கு மிளகு, திப்பிலி, மாஞ்சில், கடுக்காய் நெல்லிமுள்ளி, தாளிக்காய், கஸ்தூரிமஞ்சள், பூலாங்கிழங்கு பச்சிலை, பீதரோகணி, ஏலம், சீரகம் வகை 1-க்கு பலம் அரை வீதம் பால்விட்டு அறைத்துக் கலந்து மெழுகு பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வார மிருமுறை அதைத் தேய்த்து முழுகிக், கண்ணிலும் ஒரு துளி விட்டு வந்தால் எல்லாவிதமான நேத்திர நோய்களும் குணமாகும். உயர்ந்த முறை. நமது சொந்த அனுபவம்.

# * சிவகாமி—சிதம்பரனார்

"எவர்தாமு னணைந்தனரென் றிதுகாறு மறியோம்"

(அசனம்மாபேட்டை, சா. சுந்தரன்.)

திரும்பிப் பார்க்கும் எந்தப் பக்கத்தையும் மறைக்கும் வரைகளையும், மரமேறுதலையே தொழிலாக வுடைய மந்திகளு மறிய முடியாதபடி வானுற வோங்கி வளம்பெற வளர்ந்து நிற்கு மரங்களையும், முட்கள் மண்டித் துயர் கொடுக்கும் புதர்களையு முடைய ஒரு திக்குத் தெரியாத காட்டில், அந்திமாலை நேரத்தில். காவித்துணியும், கற்றைச்சடையும், தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியு முடைய ஒரு இளமுனிவன் சென்றுகொண் டிருந்தான். அந்நேரத்தில் புதுத் தவமக னொருவன் அம்முனிவனை யண்மி,

"வாழியநின் மலரடிகள் மௌனதவ முனிவ
மன மிரங்கி யருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயிற்
பாழடவி யிதிற்சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவி யொருவனை யளித்த பலனுறுவை பெரிதே"

என்று வணங்கினன். அதாவது, ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலுமாய ஆற்றலையும், வேண்டிய வேண்டியாங் கெய்தும் விழுப்பத்தையும் தரவல்லதாய அருந்தவ முயலும் அந்தணரே! தேவரீர் திருவடிகட்கு அடியேன் வணக்கம். ஐய! தாங்கள் ஞான வரம்பென்னும் மௌன நிலையைக் கைக்கொண்ட முனிவரே யாயினும், ஏழையேன் பொருட்டுத் திருவுள மிரங்கிச் சில சொற்கள் கூறவே வேண்டும். காலையி லிருந்து இக் கண்ணுழையாக் கானகத்தில் அலைந்து திரிந்து அயர்ந்து போனேன். எல்லை குறியாது தன் நிழலை யளக்குந் தன்மை போன்று நான் நடக்க நடக்க அடவி வளர்ந்து கொண்டே செல்கின்றது. "ஆரிருளில் இனிநடக்க ஆவதில்லை" யாதலின் இக்கானகத்தில் முன்னமே பயின்றறிந்தவர்போற் றோன்றும் தாங்கள் இரவு தங்குவதற்கு ஏழையேனுக்கோ ரிடங்காட்டி யருளவேண்டு மென்று பணிந்து வேண்டினன்.

இதனைக் கேட்ட அம்முனிவன் கூறுவான்: "ஏகாந்தப் பெருங்ககனம், இதில் உலகர் அணையார்; தாவறத் துறந்த தவத்தினர்க்கன்றி மற்றையோர்க்கு இக்கானகத்தில் உறைதல் இயலாது. விரிந்து தோன்றும் இவ் வெட்ட வெளியை யன்றி, பாதுகாப்போடு கூடிய இடம் ஒன்றும் இங்கு கிடையாது. இவ்வெளியிடமே என் வீடாகும்.

* இஃது, ஆசிரியர், திருவனந்தைச் சுந்தரம்பிள்ளை யவர்கள் இயற்றிய "மனோன்மணீயம்" என்னும் நாடக நூலினுள் "சிவகாமி சரிதம்" என்னும் தலைப்பில் செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ளதொரு கதையாகும்.



அறிவுநூல்கள் பலவற்றையும் ஆய்ந்து ஆசையறுதலே வீட்டின்பத்தை நேரே யடையக் காரணமாகு மென்பதனை யுணர்ந்து, அறங்கிடந்த சிந்தையராய், ஆசையெலாந் துறந்த அதிவீரரா யுள்ளா ரன்றி வேறு எவராயினு மிங்கடையார். அத்தகையோர் உறங்க வேண்டுமாயின் பூவா லியன்ற பொங்கெழி லமளியைக் கருதார். உண்ணுதற் கெனில் பாலமிழ்தத்தையும் ஒரு பொருட்டாக நினையார். பூவமளியையும் புற்றரையையும் பொருந்த நோக்குவார். பாலமிழ்தத்தையும் பருக்கையற்ற கூழையும் ஒன்றாகப் பாவிப்பார்கள். ஆதலின், மைந்த! என்பாலுள்ளது யாதெனினும் என்னோடு வரின் அஃதுனதாகும். அதனையுண்டு, இரவு என்னோடு தங்கியிருந்து, விடிந்த பின்னர் நீ விரும்பிய இடத்திற்குச் செல்வாயாக" வென்று சிந்தையும் செவியும் தித்திக்கும் படிக் கூறினான்.

அச்சொற்களைக் கேட்டலும் புதுத் தவமைந்தனுக்கு ஏதோ தன் பழநினைவு மனத்திலெழ கண்கள் நீரைத் துளித்தன. ஆயினும், ஒருவாறு அடக்கிக்கொண்டு அம்முனிவன் செல்லும் வழியே தொடர்ந்து நடந்து சென்றுகொண் டிருந்தான்.

இந்திரசால வித்தை யெதுவோ வொன்றைச் செய்தற்கு இட்ட திரைபோன்று எட்டுத்திசையும் இருள் விரிந்து பரந்தது. தமக்குள் கண்ணைச் சிமிட்டி ஏதோ இரகசியம் பேசிக்கொள்வதைப்போல் சுந்தர தாரகைகள் அந்தரத்தே விட்டு விட்டு ஒளிர்ந்தன. வித்தை நடக்கப் போவதை விரைந்தோடித் தெரிவிப்பவர் போன்று வௌவால்கள் அங்கு மிங்குமாக அலைந்து திரிந்துகொண் டிருந்தன. அதன் பின்னர் விளக்குப் பிடித்துச் செல்வதை யொப்ப மின்மினிப் பூச்சிகள் ஓடியாடின. இந்தவகையாக அந்திப்போது வந்து கழிந்த பின்னர், காதலர் உயிர் கருகக் கங்குற்போது வந்துற்றது.

எங்கும் ஒரே இருள். இவற்றிற்கிடையே, படம்விரிந்த பாம்புகளின் தலையிலுள்ள மாணிக்கங்களின் ஒளியும், இங்கு மங்குமாகச் சிந்திக்கிடக்கும் யானைத் தந்தங்களி னொளியும், வேங்கை வரிப்புலிகளின் அழல் விழி யொளியு மன்றி வேறோ ரொளி யில்லை.

ஊசியைப் பின் தொடர்ந்து செல்லும் நூல் போன்று, பேரிளைப்போடு பின் தொடர்ந்து செல்லும் புதுத் தவமைந்தன், அரிய புதர்களை யெல்லாம் இடையிடையே யகற்றி அன்போடு தன்னை அழைத்துச் செல்லும் முனிவனது அடிகளை யன்றி வேறொன்றும் அறியாதவனாய்ச் சென்றுகொண் டிருந்தான்.

ஒன்றாகச் சேர்ந்து பின்னிக்கிடக்கும் முட்காடுகளை யெல்லாம் இருபுறமும் ஒதுக்கி நுழைந்தும், உயர்ந்த மலைகளின்மேலும் குன்றுகளின்மேலும் ஏறிக்குதித்தும், ஓமென்னும் ஒலியுடனே "பாடி நகர்ந்துவரும் நதிகள் பலவற்றையும் தாண்டியும், கடைசியாக அத்தவமுனிவன் தங்கு மிடத்தை யடைந்தார்கள்.

குளிர் காய்வதற்கான நெருப்பொன்றினையன்றி வாயிலென்றும், பூட்டென்றும், மதிலென்றும் சொல்லும் படியான மனைக்குரிய மரபுகள் எதுவுமின்றி நின்ற, அத்தனியிடத்தை யிவர்கள் அடைந்ததும்,

முனிவன் நெருப்பை யின்னும் எழுப்புவதற்காக விறகுகளை யடுக்கினான். வந்த மைந்தன் உள்ளங் கூசி யொருபுறமாக ஒதுங்கி யொதுங்கி நிற்கின்றதைக் கண்டு,

"இனிநடக்க வழியுமில்லை, இனித் துயருமில்லை,
இதுவே நம் இடம் மைந்த! இக்கனலின் அருகே
பனிபொழியும் வழிநடந்த பனிப்பகல இருந்து
பல மூல மிது புசிக்கிற் பறக்கு முனதிளைப்பே"

மைந்த! இதற்குமேல் நாம் நடந்து செல்ல வேண்டியதில்லை. ஆதலின் இனித துயரில்லை; இதுவே நாம் தங்கவேண்டிய இடமாகும். பனிபொழியும் வழியில் நடந்து வந்ததனா லுண்டாகிய குளிர் நீங்கும்படி இந்நெருப்பருகே சிறிதுநேரமிருந்து இக்காய் கனி கிழங்குகளைத் தின்பையாயின் உனது இளைப் பெல்லாம் பறந்தோடிவிடும்" என்று கூறிப் பல இனிய கந்த மூல பலாதிகளை யெடுத்து வைத்தான்.

பின்னரும் அப்புதுமகன் ஒதுங்கி ஒதுங்கியே நின்றிருந்தான். அதனைக் கண்ட முனிவன் மீண்டும் "ஏனப்பா கூச்சப்படுகின்றாய்? 'இருவருமே ஒருவரெனில் எவர்பெரியர் சிறியர், கூச்சப்படாதே, அனல் அருகேவா" என்றன்புடன் அழைத்தான்.

இரண்டு மூன்று முறை இவ்வாறு கூறியும் நெருப் பருகிலும் செல்லாமல், தன்னிடத்தும் ஒன்றும் சொல்லாமல் தனியே ஒதுங்கி மறைந்து நிற்கும் அம்மகனுடைய மலைவுதெளிந்து, தன்னோடு கலக்கும் வகையாகப் பல பல கூறினான்.

என்ன கூறியும் அவை யொன்றும் அவன் செவியில் ஏறவில்லை. பாதிமதி போன்ற முகத்தைத் தனது பதும மலர் போன்ற கையால் மறைததுக்கொண்டு, சுவரில் தீட்டிய சித்திரம்போன்று அசைவற்று நின்றிருந்தான்.

உற்று நோக்கினான் முனிவன். "கண்கள் தொடுமெண்ணற் கேணியிற் சுரந்து நீர் பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி" முகங் கவிழ்ந்து நின்றிருந்த குறியினின்றும் ஏதோ ஒன்று தன் கருத்தில் தோன்றிற்று. பின் வருமாறு வினவலுற்றான்:—

"எழிலாரு மிளமையினில் இடை யூறுதிகளால்
இல்லமகன் றிவ்வுருவம் எடுத்திவண் வந்தனையோ?
ஏதுனது கவலை? உளத் திருப்ப தெனக் கோதாய்
இழந்தனையோ வரும் பொருளை? யிகழ்ந்தனரோ நண்பர்?
காதல் கொள நீவிழைந்த மாதுபெருஞ் சூதாய்க்
கைவிடுத்துக் கழன்றனளோ? மெய்விடுத்துக் கழறாய்."

வருத்த மறியாது வளமையோடு வாழ்தற்குரிய இளமைப் பருவத்தில் மேன்மேலும் வந்துற்ற இடுக்கண்களால் மன நைந்து வீட்டை விட்டு வெளிக்கிளம்பி இவ் வேடங்கொண்டு இங்கு வந்தடைந்தனையோ? பெறற்கரும் பொருளைப் பெற்றிழந்தனையோ? வேற்றுமை யின்றிக் கலந்து நட்பு கொண்ட நண்பர் மனம் வேறுபட்டு இகழ்ந்தனரோ? அன்றி, மறப்பறியேன், மறந்தா லுயிர்தரியேன்



என்றெல்லாம் காதல் பேசித் தனது மழலை மொழிகளால் மயக்கிய மங்கையானவள் நீ விரும்பிச் சென்றபோது 'தன்னை யரியளென வெண்ணித் தானே மனத்திற் றருக்குற்று' மனம் நோகச் செய்தாளோ? உண்மையை ஒளியாது கூறுவாய்" என்று வினவிப் பின்னும் "ஐயகோ! இவ்வையகத்தில் அமைந்துள்ள சுகமெல்லாம் இவ்வழலால் இங்கெழுந்தடங்கும் நிழலுக்குச் சமமாகும். பெண்கள் பேசும் காதல் மொழிகளெல்லாம் பெரும் புரட்டாகும். பிறங்குகின்ற அவருடலோ பெருங்கபடமிடு கலனாகும்" என்று தனது மன வெரிச்சலால் பல பல வசை மொழிகள் கூறினான்.

இவ்வாறெல்லாம் கூறிய சொற்களைச் செவியேற்ற அம்மைந்தன் கனவினின்றும் விழித்தெழுந்தவன்போல் விழித்து, மருட்சியுற்று, வெயிலின் முன்னர்ப்பட்ட விளக்கொளி போன்றும், மின்னொளியிற் பட்ட கண் போன்றும் வெட்கி முகம் வெளுத்தான்

தான் இயம்பிய சொற்களினின்றும் என்ன பெறப்படுகின்ற தென்பதை யறிய வெண்ணி, ஆவலோடு முகத்தை யுற்று நோக்கி யிருந்த முனிவன் இக்குறிகளைக் கண்டு, உள்ளத்துள் மகிழ்ச்சி யுற்று, இன்னும் தெளிவா யறிவான்வேண்டி, விறகுகளை யெடுத்தடுக்கி நெருப்பை யெழுப்பி மீண்டும் அவன் நோக்க,

"வேட ரகசியங்க ளெலாம் வெட்டவெளியான"

நின்மலமான விபூதிப் பூச்சுக்குள்ளே பொன் மயமான மெய்யானது நீறு பூத்த நெருப்பைப் போன்று விளங்கி ஒளி விரிக்கும். உற்று நோக்கும் தன்கட் பார்வையில் நாணி யொடுங்கும் கண்ணிரண்டும் பெண்மை யுருவத்தை வெளிப்படுத்தும். கூச்சந் தங்கிய முகமானது நாணத்தால் கோணி யழகை வீச, கண்ணொடு கண்ணிணைந்தபோதுண்டாகிய வோருணர்ச்சியினால் சரிந்த குழற் பாரமானது சடைக் கோலத்தை ஒழிக்கும். கொல்லன் உலைக்களத்துத் துருத்தி போன்று பெருமூச்சு விடுந்தோறும் வீங்கி யெழும்புகின்ற கொங்கைகளிரண்டும், புனைந்த வேடம் முழுவதையும் அழிக்கும். (தொடரும்)

---

தென்னிந்திய மகாஜன புத்தகசாலை
எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்
வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்
செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# விகடத் துணுக்குகள்

முனியன் : திருமண் தரிப்பதும் விபூதி பூசுவதும் எதற்காக?

கரியன் : மண்ணாய்ப் போக ஆசைப்படுகிறவர்கள் திருமண் இடவேண்டும். சாம்பலாய்ப் போக விரும்புகிறவர்கள் விபூதி தரிக்கலாம்.

முனியன்: அப்படியானால் விபூதி, திருமண் தரிப்பது நாம் கெட்டுப் போவதற்காகவா ?

கரியன்: நாம் கெடுவதற்கல்ல; நமது வினை கெடுவதற்கு.

சு. நா. து.

---

மனைவி : இரண்டு நாளில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போய் எத்தனை நாளாயிற்று. இன்றைக்கு மாத்திரம் நீங்கள் வராதிருந்தால் நான் தற்கொலையல்லவா செய்து கொண்டிருப்பேன்.

புருடன் : அடடா! முன்னாடியே தெரிந்திருந்தால் இன்னும் இரண்டு தினங்கள் தாமதித்து வந்திருப்பேனே.

'பேனா'

---

ஒருவன் : நாளைக்கு இறந்து விடுவாய் என நிச்சயமாய்த் தெரிந்தால் என்ன செய்வாய்?

மற்றவன் : ஏராளமாய்க் கடன் வாங்கி விடுவேன்.

N. R. கிருஷ்ணன்

---

உபாத்தியாயர் : நாயின் நாக்கு ஏன் எப்பொழுதும் வெளியில் தொங்குகிறது.

ஒரு மாணாக்கன் : வாலின் பாரத்தைச் சமப்படுத்துவதற்காக சார்!

T. வேலுப் பிள்ளை

---

தகப்பனார் : சுப்பா! என்னடா செய்துகொண் டிருக்கிறாய்?

சுப்பன் : சும்மாதான் இருக்கிறேன்.

தகப்பனார் : கருப்பா! நீ என்ன செய்கிறாய்?

கருப்பன் : நான் சுப்பனுக்கு ஒத்தாசை செய்கிறேன்.

N. R. கிருஷ்ணன்

---

செவிட்டு நோயாளி : டாக்டர்வாள்! பீஸ் எவ்வளவு?

டாக்டர் : ஐந்து ரூபாய்.

செவிட்டு நோயாளி : அவ்வளவு தரமுடியாதுங்க: ஏழைங்க. ஏழு ரூபாய் வாங்கிக் கொள்ளுங்க.

டாக்டர் : அதெல்லாம் முடியாது. பத்து ரூபாய்க்குக் குறைவாக வாங்கவே முடியாது.

T. M. செங்கோடன்.

---



பங்கஜம் : அடே ராமா! ஆயாசமா யிருக்கிறது. கொஞ்சம் டீ கொண்டு வா.

சமையல்காரன் : என்ன டீ கொண்டு வர! ரோஸ் டீயா?

K. வாழவந்த பண்டாரம்.

---

நண்பர் : ஐயா ஜோஸ்யரே! எங்கே 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்றீர்களே! எத்தனையோ வழிகளில் பிரயத்தனம் செய்தும் ஒன்றும் கைகூடவில்லையே!

ஜோஸ்யர் : நான் வழி பிறக்கும் என்றுதானே சொன்னேன். கைகூடும் என்று நான் சொல்லவில்லையே.

சு. தாணப்ப முதலி.

---

குரு : மிகுந்த புத்தி மயக்கத்தை உண்டாக்கும் 'கள்' எது?

சிஷ்யன் : விகட மக்கள்.

R. வீரபத்திரன்.

---

தரித்திரன் : ஐயா! தாங்கள் ஏன் தர்மமே செய்வதில்லை.

தனவந்தன் : அட போ! செல்வமானது ஒரு பெரிய சுமை. அதை வைத்துக்கொண்டு நாங்கள்தான் இராப் பகல் தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறோமே. ஏழைகளுக்கும் அதைக் கொடுத்து அவர்களை ஏன் கஷ்டப்படுத்த வேண்டும் என்ற கருணையினால்தான், வேறென்ன!

* N. R. கிருஷ்ணன்.

---

ராமன் : எங்கே போகிறாய்?

சேஷன் : தமிழரசு வாங்க.

ராமன் : ஓ! அந்த அரசுக்கு நீ என்ன! ஒரு வார்சா?

R. திருமுடி.

---

வக்கீல் : ஏனய்யா! விசனமாய் உட்கார்ந்திருக்கிறீர். கீழ் கோர்ட்டில் கேஸ் தள்ளப்பட்ட சமாசாரம் தெரியுமோ?

கட்சிக்காரன் : ஐயையோ! எப்போது தள்ளப்பட்டது?

வக்கீல் : போனால் போகட்டும். மேல் கோர்ட்டிலும் என்னையே வையும். அந்த கேசை அடித்துத் தள்ளி விடுகிறேன்.

M. நாகேஸ்வரன்

---

* பரிசு பெற்ற விகடம் அனுப்பியவர் விலாசம்:—சைதாப்பேட்டை, ஆரணி.

மித்திரன் வளர்ச்சியுற விரும்பினால்

இன்றே உங்கள் சந்தாவை

அனுப்பி வையுங்கள்.

# சமூக சீர்திருத்தமும் தொழில் தேர்ச்சியும்

(ஈ. வே. சோமசுந்தரம், கோவை)

(ஜனவரி இதழ் 27-ம் பக்கத் தொடர்ச்சி)

(உலக மாறுதல்களை யனுசரித்து, பகுத்தறிவுக்கு ஏற்ற திட நம்பிக்கையுள்ள வாழ்க்கைச் சித்தாந்தத்தோடு சமூக சூழல்களை எதிர்த்து தொழிலிற் பற்றுடன் ஒவ்வொருவரும் வாழல் வேண்டும். ஒவ்வொருவரும் நேர்மையான நடத்தையும், சமூக வாழ்வில் தூய்மையும் கைக்கொண்டு கல்வித்துறையின் நிர்வாகத்தைப் பொது ஜனங்கள் கைவசமாக்கிவிடல் வேண்டும்.)

## 4. தொழில் நேர்மை அல்லது வியாபார நாணயம்

வியாபார முறையில் நாணயம் என்பது பொது மக்களின் நற்குண நன்னடத்தையைத் தழுவியே இருக்கின்றது. தொழில் முறைச் சம்பந்தங்களில் நாணயம் இன்றி இருத்தல் மற்ற தேசங்களில் இருப்பதை விட இந்தியாவில் மட்டும் அதிகம் என்று சொல்லிவிட முடியாது. குறைவுபடியான நிறைகளும், படி முதலான அளவைகளும், பொருளின் தரத்தில் ஏமாற்றங்களும், சில்லரைத் தனமாக விலைவாதம் செய்தலும் (Bargaining), ஆளைக் கொல்லும் போட்டியும், திருட்டுத்தனமான ஒப்பந்தங்களும், தலைமறைவான ஏற்பாடுகளும் வியாபார உலக முழுவதிலும் சாதாரணமாகக் காணக்கூடிய சம்பவங்களே.

பொது ஜனங்களின் விவேகமான அபிப்பிராயங்களினாலும், கூர்ந்து யோசித்து அறியும் அறிவு விளக்கம் பெற்ற சுயநல நாட்டத்தினாலும், ராஜாங்க சட்ட திட்டங்களினாலும் அவை வரம்புக்குள் அடங்கி அதிகமாகப் பரவாமல் இருக்கின்றன. இத் துறைகளில் தான் நாணயமானதும் நேர்மையானதுமான கொள்கைகளும், வியாபாரத் திட்டங்களும் இந்தியாவில் வரையறுத்து விருத்தி செய்தல் வேண்டும்.

மக்களிடையே பத்துக்கு ஒன்பதின்மர் படிக்கவும் எழுதவும் தெரியாத நமது தேசத்தில் பொதுஜன அபிப்பிராயம் பலம் பெற்றதாகவும், விவேகமானதாகவும் இருப்பது அசாத்தியம் என வெகு சுலபமாக யூகிக்கலாம். ஆனால் பொதுஜன அறிவு வளர்ச்சிக்கு பலவித இயக்கங்களும், கிளர்ச்சிகளும் கருவிகளேயாகும். இவைகளின் மூலமாக இந்தியாவிலும் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலாம்.

இவ் விஷயத்தில் செய்ய வேண்டியது யாதெனில், தொழில் முறையில் தேர்ச்சிக்கும் நாணயத்திற்கும் பூரணமாக உழைக்கத்



தக்க ஒரு சிலருக்கு, வியாபார நாணயம் என்னும் இலட்சியத்தின் பெருமையையும், அதன் வெற்றியளிக்கும் சக்தியையும் மனதில் தெளிவாக விளங்கும்படி புகட்ட வேண்டியதேயாம்.

சமூக ஒழுக்க வளர்ச்சிக்கு, (இந்த இரண்டு தலைமுறையாக விவாக வயதுகள் உயர்த்தல் முதலிய பல சமூக சீர்திருத்தங்களுக்கு சிறு பான்மையோரான பிரம்ம சமாஜ, ஆரிய சமாஜத்தாரின் கிளர்ச்சியே காரணமாகும். அதைவிட அரிய பெரிய காரியங்கள் வெகு விரைவாக ராஜீய (அரசியல்) துறையில் சாதிக்கப்பட்டு இருக்கின்றன.) சீர்திருத்தம், சுதந்திரம் முதலிய லட்சியங்கள் மனிதர் மனத்தைக் கவர்வனவாய் இருப்பதால் சீக்கிரமாகவும், சலபமாகவும் பரப்பப் படுவனவாய் உள்ளன. வியாபார ஒழுக்கங்களும் கூட சாதாரணமாய் பரவுதலுக்கு ஏற்ற தன்மைகளை உடையனவே. பெரும்பான்மையோரான ஜனங்களுடைய உலக வாழ்க்கையின் அவசியங்களையும், இன்பங்களையும் பொருத்ததாக (தொழில் நாணயம்) வியாபார ஒழுக்கம் இருப்பதாலும் நாளுக்கு நாள் வேலையில்லாத் திண்டாட்டத்தின் பெருக்கத்தாலும், ஜீவனத்திற்கு வேண்டியவைகளை சேகரிப்பதில் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களினாலும், வாழ்க்கைநிலை உயர்வதற்கு ஏற்ப செலவு மேலும் மேலும் அதிகரிப்பதாலும் இவ்விஷயம் முக்யமான தொன்றாகிவிட்டது.

தொழில் நாணயத்தை உயர்த்துவதில் மிகவும் பெரும்பாகம் ராஜாங்கத்தாராலேயே செய்யப்படவேண்டும். ஏனெனில், தற்காலத்தில் சமூக நலத்திற்காக ஜனங்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பொருப்பு ராஜாங்கத்தின் மேலேதான் இருக்கிறது. இது சம்பந்தமான சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர பரிசோதனை அதிகாரிகளை அமைத்து ஒழுங்குபட நடத்துவது அரசாங்கத்தின் முதன்மையான கடமையாகும். ஆனால் முன்னேற்ற முறைக்கு உகந்ததும் வியாபார நாணயத்திற்கு ஒரு சிறிதும் குறைவு வராதபடி பாதுகாத்துவரக் கூடியதுமான ஒரு சட்ட முறையை நிர்ணயித்து விருத்தி செய்வது சர்க்கார் சமூக வளர்ச்சிக்கு செய்யவேண்டிய கடனாகும். கூட்டுறவு வர்த்தக சங்கங்கள், பண லேவாதேவி தொழிற் குறிப்பு அடையாளங்கள் (Patents), அவைகளை ஸ்வீகரிக்கும் அதிகாரம், புது வஸ்துக்களையும் இதர சாமான்களையும் தயாரிக்கும் முறைகள் முதலியவைகளை ஒழுங்குபடுத்தி மேல்பார்த்து வருவதே தற்காலத்திய சகல தேச சர்க்கார்களின் முக்கியமான காரியங்களாயிருக்கின்றன.

வியாபார நாணயத்தை உயர்த்துவதற்கு யாவற்றைக் காட்டிலும் முக்கியமான ஒரு உணர்ச்சி வியாபாரிகளின் உண்மையான அறிவறிந்த சுயநலமே யாகும். இவ்விஷயத்தைப் பற்றி யோசித்தால், எந்த வியாபாரிக்கும் நாணயமற்ற செய்கைகளும், ஒழுங்கீனமும், ஏமாற்றுதல்களும், வெகுவாக விலைவாதம் செய்தலும் லாபகரமானதன்றாம். இம்மாதிரி ஏமாற்றுதல்கள் இந்தியாவில் இருப்பதற்குக் காரணம், பல மேற்கு தேசங்களில் நடைபெறுவது போல், கடைகளில் சாமான்கள் வாங்குபவர்கள் பெண்களாய் இல்லாமல், நமது தேசத்தில் ஆண்களே சென்று வருவதேயாம். ஏனெனில் சாமான்கள் வாங்க முற்படும் பெண்கள் ஆண்களைவிட புத்திசாலித்தனமாக

# சிறுவர் சிறு கதை

## அடைபட்ட பூதம்

[ஈ. வே. சோமசுந்தரம், கோவை.]

ஒரு கிராமத்தில் ஒரு விறகுவெட்டி இருந்தான். அவன் தன் கிராமத்திற்கு அடுத்தாற்போ லிருந்த அடர்ந்த காட்டில் மரம் வெட்டி ஜீவித்து வந்தான். அதிகாலை முதல் இரவு வெகு நேரம் வரை மிகவும் சிரமப்பட்டு மரம் வெட்டி சிறிது காலத்தில் கொஞ்சம் பொருள் சேர்த்தான். பிறகு, தன் சிறு பையனைக் கூப்பிட்டு 'பிள்ளாய்! நீ எனக்கு ஓரே பையன். நான் சேமித்து வைத்திருக்கும் பணத்தை உன் படிப்பிற்கு செலவிட விரும்புகிறேன். நீ கஷ்டப்பட்டு நன்றாய்ப் படித்து ஏதாவது உபயோகமுள்ளதைக் கற்றுக்கொள். அதைக்கொண்டு—பிற்காலத்தில் நான் வேலை ஒன்றும் செய்ய முடியாமல் வீட்டோடு உட்கார்ந்திருக்கும்போது என்னை போஷிப்பாயாக', என்று சொல்லி பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினான்.

பையனும் புத்திசாலியாகையால் வெகு கவனத்தோடும், சிரத்தையோடும் படித்து வந்தான். அவனது கூர்மையான புத்தியையும், படிப்பின்மேல் அவன் கொண்டிருந்த ஆசையையும், அவன் உபாத்தியாயர்கள் கண்டு அவனைப் புகழ்ந்தார்கள். அவனும் மேலும் மேலும் ஊக்கமாய்ப் படித்து வந்தான். உயர்தரக் கல்வி கற்கவும் சென்றான். சில வருடங்களே படித்தான். மிகவும் அக்கரையாய்ப் படித்து வந்தான். ஆனால், அவன் படிப்பு முடியும்வரை அவன் தகப்பனால் பணம் அனுப்ப முடியவில்லை. அதற்கு முன்னரே சேர்த்து வைத்திருந்த பணம் முழுதும் செலவழிந்து விட்டது. மேற்கொண்டு பணம் அனுப்ப விறகு வெட்டிக்கு வகையில்லை. பையன் திரும்பி வீடு வர நேர்ந்தது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் பணத்திற்குப் பிரதியான அளவு சாமான்களைத் தவறாமல் ஏமாறாமல் வாங்குவார்கள். ஒரு தொழிலின் வெற்றியும், லாபமும் நிரந்தரமான ஏற்றம் குறைவில்லாத வாங்கும் தொகுதியினரைப் (Permanent Customers) பொருத்திருக்கின்றது. ஒரு வியாபாரியின் மேல் ஜனங்களுக்கு நல்லபிப்பிராயமும் நம்பிக்கையும் மதிப்பும் இருப்பதே அந்த வியாபாரத்திற்கு பெரிய பலமாகும். தொழில் நாணயமே வியாபாரத்தின் வெற்றிக்கு இதகால பரியந்தமும், இனி மேலும் நல்ல குறிக்கோளும், அடிப்படையுமாகும். (தொடரும்



வீட்டுக்கு வந்ததும், மரம்வெட்டி மகனைப் பார்த்து, 'அப்பா குழந்தாய், என் சக்தி அவ்வளவு தான். நான் இப்போது சம்பாதிப்பது நமக்கு சாப்பாட்டிற்கேபோதியும் போதாமலும் இருக்கிறது. வேறு விதியில்லை' என்றான்.

மகன்—'அப்பா! எல்லாம் கடவுள் செயல், நம்மால் என்ன முடியும்? இப்படிப் போவது கடவுளிஷ்டமானால் எல்லாம் நமது நன்மைக்கே என்று நாம் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதுதான்' என்று தைரியப்படுத்தினான்.

மறுநாட் காலை தகப்பன் கோடரியை எடுத்துக்கொண்டு மரம் வெட்டக் காட்டிற்குப் புறப்பட்டான். மகன் தானும் கூட வருவதாகவும் அதனால் தகப்பனுக்கு உதவியாயிருக்கும் என்றும் சொன்னான்.

மரம் வெட்டி—'என்னிடம் இன்னொரு கோடரி இல்லை, மற்றொன்று வாங்கப் பணமுமில்லை. என்ன செய்வது'

மகன்—'அண்டை அயலாரிடம் இரவலாக ஒன்று வாங்கி வந்தால் நானும் வரலாமே! நான் பணம் சம்பாதித்துக் கொடுக்குமட்டும் அண்டை வீட்டான் இரவல் கொடுக்கமாட்டானா?' என்று கேட்டான். மரம் வேட்டியும் அதன்படியே ஒரு கோடரியை இரவல் வாங்கி வந்தான்.

தந்தையும் தனயனும் மத்தியானத்திற்குச் சிறிது ஆகாரம் எடுத்துக்கொண்டு மரம் வெட்டச் சென்றார்கள். வழக்கம் போல் தந்தை மரம் வெட்டிக்கொண் டிருந்தான். மகனும் தகப்பனுக்கு உதவி செய்துகொண் டிருந்தான். வரவர வெயில் அதிகரித்தது. மத்தியானமானதும் சூரிய வெப்பம் தாங்க முடியவில்லை.

தகப்பன்—'சற்று இளைப்பாறலாம். ஆளுக்குக் கொஞ்சம் ஆகாரத்தைச் சாப்பிடவும் இதுதான் சரியான நேரம்' என்று தின்பண்டத்தை மகனுக்குக் கொடுத்துத், தானும் தின்ன ஆரம்பித்தான்.

மகன்—'அப்பா, நீங்கள் இளைப்பாறுங்கள். நான் இதைத் தின்றுகொண்டே சிறிது உலாவி வருகிறேன்.'

தகப்பன்—'ஏண்டா பையா துள்ளுகிறாய்? சுற்றிவிட்டு வந்தால் நீ கோடரியைத் தூக்கி வெட்ட முடியாமல் களைத்துப் போவாய்; வேண்டாம். பேசாமல் என் பக்கம் உட்கார்ந்து இளைப்பாறு.'

மகன்—'இல்லை அப்பா! நீங்கள்தான் வயதானவர்கள். களைத்து இருக்கிறீர்கள். நான் களைப்பே அடையவில்லை'

என்று சொல்லிவிட்டு காட்டிற்குள் மரக்கிளைகளை அண்ணாந்து பார்த்துக்கொண்டே சுற்றி வந்தான்.

சிறிது தூரம் சென்றதும் பெரிய ஆலமரம் ஒன்று எதிர்ப்பட்டது. அது வானுற ஓங்கி வளர்ந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். அப்போது அவனுக்கு ஏதோ சத்தம்கேட்ட மாதிரியிருந்தது. யார் பேசுவது என்று உற்றுக் கவனித்தபோது தரையின் கீழிருந்து அந்தச் சத்தம் வந்ததாகத் தெரிந்தது.

அவன் குனிந்து உற்றுக்கேட்க, 'என்னை வெளியே விடு, என்னை விடுதலை செய்,' என்று இடைவிடாமல் யாரோ கத்தினதுபோலிருந்தது. சத்தம் எங்கிருந்து வந்தது என நம் வாலிபன் அறிந்துகொள்ள முடியவில்லை. அவன், 'நீ எங்கிருக்கிறாய்?' என்றான். உடனே குரல், 'நான் இந்த மரத்தின் வேரின் மத்தியிலிருக்கிறேன், என்னை விடுவி,' என்று பதில் தந்தது. வாலிபன் கோடரியால் வேரை வெட்ட அதனடியில் ஒரு குழியிருந்தது. அதில் ஒரு சீசா மூடிக் கிடந்தது. அதை எடுத்து சூரிய வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தான். சீசாவிற்குள் ஏதோ தவளைபோல் ஒரு உருவம் தாவித் தாவிக் குதித்துக்கொண்டே 'என்னை வெளியில் எடு, என்னை விடுவி, விடுவி' என்று கூவிக்கொண்டேயிருந்தது. வாலிபன் கபடமின்றி சீசாவை மூடியிருந்த கார்க்கைத் திருகித் திறந்தான்.

திறந்ததுதான் தாமதம்; உடனே உள்ளிருந்து சிறிது சிறிதாக புகைபோல் கிளம்பி அந்த உயர்ந்த மரத்திற்குப் பாதி உயரமான ஒரு உருவம் நின்றது. அந்த உருவம் 'நீ என்னைச் சீசாவிலிருந்து திறந்து விடுவித்ததற்கு என்ன வெகுமதி உனக்குக் கிடைக்கும் தெரியுமா?' என்று கேட்டது.

'தெரியாதே, அது எப்படி எனக்குத் தெரியும்?' என்று அசட்டையாய்ச் சொன்னான் வாலிபன்.

"உன் கழுத்தைத் திருகி எறிவதுதான் என் வெகுமதி" என்று முரட்டுக் குரலில் அவ்வுருவம் கூறிற்று.

"என் தலையைப் பற்றிய யோசனை இதர மனுஷாளைக்கேட்டுத்தான் செய்தல் வேண்டும். நான் என்னிஷ்டப்படி என் தலையை பேரம் பேசக்கூடாது" என்று வாலிபன் வெகு கம்பீரமாகச் சொன்னான்.

'இதர மனிதரோ, சொந்த மனிதரோ அதைப்பற்றி எனக்கு அக்கரையேயில்லை. உன் தலையைத் திருகிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என்றது அந்த தடித்த உருவம்.

'சரி சரி, நீ சொல்வது நியாயமான பேச்சுத்தான். ஆனால் முதலில் எனக்குள்ள சந்தேகம் தீரவேண்டும். இவ்வளவு உயர



முள்ள நீதான், அந்தச் சிறிய சீசாவில் இருந்த குட்டிப் பயல் என்று என் புத்திக்கு எட்ட வேண்டும்' என்று சொல்லி, 'இல்லாவிட்டால்' என்று மேலும் பேச ஆரம்பித்தான்.

அதற்குள் அந்தப் பூதம், 'இந்தச் சந்தேகந்தானா! இதோ பார்' என்று சிறிது சிறிதாகச் சுருங்கி அந்தச் சீசாவில் புகுந்தது. அது முழுதும் நுழைந்ததோ, இல்லையோ நம் வாலிபன் சீசாவின் வாயைச் சடக்கென்று கார்க்கால் இறுக மூடிக் கெட்டியாய்த் திருகிவிட்டான்.

மணிவேகன் என்றபூத உருவம் தான் ஏமாந்துபோனதைக் கண்டுகொண்டது,

"அப்பா, வாலிபா! என்னைத் தயவு செய்து வெளியே விடு. உன்னை ஒன்றுஞ் செய்யவில்லை" என்று வெகு பரிதாபமாய்க் கூவிற்று.

"தெரியும், தெரியும் உன்சங்கதி. வெளியே வந்ததும் மண்டையைப் பிளப்பேன்?' என்று சொல்லுவாய்! இன்னுமா ஏமாறுவேன்?" என்று சொல்லிவிட்டு சீசாவை முன்னிருந்த பொந்தில் போட்டு விட்டுத் தன் தகப்பனிருந்த பக்கமாகப் போக ஆரம்பித்தான்.

'இல்லவே யில்லை, சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நீ இந்தத் தடவை என்னை வெளியே விட்டால் உனக்கு என்றென்றும் குறையாத செல்வம் கிடைக்கும்படி செய்கிறேன். வீணாய் இந்த நல்ல சந்தர்ப்பத்தைக் கைவிடாதே,' என்று திரும்பத் திரும்பக் கூவிற்று.

வாலிபன் உள்ளம் இரங்கியது. சீசாவைத் திறந்து விட்டான். மணிவேகன் முன்போலவே புகைபோல் வெளிவந்து பூதாகாரமாய் அவன் முன் நின்றது. ஆனால், இப்போது அதனிடம் குரூரமான கோரப் பார்வை யில்லை. அன்பாயும் நன்றியோடும் அவனை நோக்கி, "ஐயா, இதோ பார். இந்த மந்திரக்கோலை நீ இனாமாக எடுத்துக்கொள். இது மகா சக்தியுள்ள மந்திரக்கோல். அதன் குறுகிய நுனியால் எந்த உலோகத்தைத் தொட்டுத் தடவினாலும் உடனே அது வெள்ளியாய் விடும். பருத்த மற்றொரு நுனியால் எந்தப் புண், காயம் முதலியவற்றைத் தொட்டாலும் அது தக்ஷணம் ஆறிவிடும்" என்று சொல்லி ஒரு உருண்ட கட்டையை அவனிடம் நீட்டிற்று.

மிகவும் கவனிப்புள்ள வாலிபன் உடனே அதைப் பரீக்ஷித்து விட எண்ணி தன்கோடரியால் ஒரு மரத்தின் பட்டையைச் செதுக்கிவிட்டு அந்த இடத்தில் மாத்திரைக் கோலின் கனத்த பாகத்தை வைத்தான். சில நிமிடங்களில் மரத்தின்

பட்டை முன் போல் வளர்ந்து வெட்டப்பட்ட பாகத்தை மூடிக்கொண்டது. மாத்திரைக்கோலின் குறுகிய நுனியால் கோடாரியைத் தொட்டான். பளிச்சென்று வெள்ளியாய் விட்டது.

பூதம்: 'நீ என்னைத் திறந்து விட்டதற்கு நான் உனக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்' என்றது. 'இந்தக் கோலை நீ எனக்குக் கொடுத்ததற்கு வந்தன மளிக்கின்றேன்' என்று கூறிவிட்டு வாலிபன் தகப்பனிடம் சென்றான்.

நடந்த விஷயத்தைத் தகப்பனறிந்து மகிழ்ந்தான். உடனே இருவரும் வீடு திரும்பினர். வெள்ளிக்கோடரியை விற்று தகப்பனுக்கு சுகமே காலங்கழிக்க வேண்டிய அளவு கொடுத்து விட்டு வாலிபன் மீண்டும் சர்வகலாசாலைக்குச் சென்று வைத்திய சாத்திரம் கற்றான்.

அவன் சில வருடங்களில் உலகப்பிரசித்தி பெற்ற வைத்திய நிபுணன் ஆனான். ஏனென்றால், கருத்துடன் கற்றதோடு, அவனிடம் எப்பேர்ப்பட்ட காயத்தையும் தொட்டவுடன் ஆற்றக் கூடிய சக்தியுள்ள மணிவேகன் என்னும் அடைபட்ட பூதம் கொடுத்திருந்த மந்திர மாத்திரைக்கோ லிருந்த தல்லவா?

குறிப்பு:—

(1) மரம் வெட்டி—சாதாரண தொழிலாளி.

மகன் பணமின்றி படிக்காமல் வீட்டுக்கு வருதல் } சமூகத்தில் வறுமையும் தொழிலாளிகளுக்கு மேல் நிலைக்கு வர சௌகரியம் இன்மையும்

(2) மகனைப்படிக்க வைத்தல்—மனிதன் அறிவு வளர்ச்சி பெறல்

(3) அடைபட்ட பூதம்—ஆராய்ச்சியும் விரக்தியும் அற்ற மனம்.

(4) கபடமில்லாமல் திறந்து விடல்—அறிவால் மனத்தை அடக்காமல் இஷ்டப்படி இயங்கும்படி விடல்—ஆபத்து.

(5) உள்ளேபுகச் செய்தல்—அறிவால் மனத்தை அடக்கல்

(6) மறுபடியும் வெளிவிடல்—அறிவிற்கு அடங்கிய மனோ வியக்கம்.

(7) மாத்திரைக் கோல் இரு நுனியுள்ளது (1) i. குறுகியது ii. பருத்தது } மனத்தை ஒரு முகப்படுத்தி (1) எக்காரியத்தையும் சாதிக்கும் சிரத்தை. (2) அன்பின் வழி தொண்டாற்றும் உதார குணம்.

# விழுந்துவிட்டார் வேலு முதலியார்

[மா. அ. க.]

வேலு முதலியார், 'சிவ பரம்பொருள் ஒன்றே நித்தியமானது, சிவத்திற் கன்னியமான தேவதை ஒன்றுமில்லை' என்ற உயரிய நோக்கமுள்ளவர். காடன், மாடன், சங்கிலி, கருப்பன், செல்லாத்தாள், தண்டுமாரி, காட்டேறி, முனீஸ்வரன் முதலிய சில்லரை தேவதைக ளிருப்பதாக அவர் நம்புவதில்லை. சாமி ஆடுகிறவர்களைக் கண்டால் எள்ளி நகையாடுவார். தமிழ் நூல்களில் நுண்ணிய ஆராய்ச்சியுடைய முதலியாருக்குச் சிவனடியாரிடத்து மிகுந்த பக்தி யுண்டு. என்றாலும் வெறும் வேஷதாரிகளைச் சேர்ப்பதில்லை. முதலியாருக்கும் அவரது நண்பர்களுக்கும் துஷ்ட தேவதைகள் உண்டா இல்லையா என்பதைப்பற்றி அடிக்கடி வாதம் நிகழ்வதுண்டு. கடைசியில் முதலியாரே வெற்றி பெறுவார். "எல்லாவற்றிற்கும் மனமே காரணம். துஷ்ட தேவதைகள் வன்மையற்ற மனதினால் சிருஷ்டிக்கப்படுகின்றன. மனோதிட முடையவர்களுக்கு அவையில்லை. பாமரர்கள் மனதிலுண்டாகும் பயத்திலே அவை குடியிருந்து வருகின்றன. ஆகையால், மக்கள் மனோதிடத்தைப் பல விதத்திலும் தேடிக்கொள்ள வேண்டும். மனோதிடம் இல்லாதவனே பல்வகைத் துன்பங்களையும் அனுபவிப்பான்" என்று பல கதைகளைச் சொல்லி தமது கொள்கையை நிரூபிப்பார்.

ஒரு ஆடிமாதம்; காலரா சென்னையின் பல பாகங்களிலும் பரவி இருந்தது. மக்களுக்கு இரவில் ஒவ்வொரு நாளும் தூக்கமே கிடையாது. எல்லோருடைய மனதிலும் பயமும், திகிலும் குடிகொண்டிருந்தன. சாமி ஆடுவோர் இரவெல்லாம் தெருத்தெருவாக ஓடி 'அதோ போகிறான் பார்; இதோ போகிறான் பார். உன்னை நான் சும்மா விடுவேனா! என் எல்லையில் பிரவேசிக்க உனக்கு இவ்வளவு தைரியமா? இந்த வாரத்தில் எட்டு உயிரைக் கேட்கிறாளே' என்று கூச்சலிட்டுக்கொண் டிருந்தார்கள். இவற்றை யெல்லாம் பார்த்து வேலு முதலியார் பரிகாசம் செய்தார். நண்பர்கள் 'வாத்தியாரே! இந்த சமயத்தில் இப்படியும் சொல்லலாமா! தெய்வ மிகழேல் என்ற ஔவையார் வாக்கையும் அவமதிக்கிறீரே! வேண்டாம்' என்று சொன்னார்கள்.

சென்னைமா நகர்முழுதும் அமளிகுமளிப்பட்டு கலங்கி நிற்கிற அந்த ஆடி மாதத்தில், ஒருநா ளிரவு சுமார் 1 மணிக்கு தெருப்பக்கமாக 'வாத்தியாரே! வாத்தியாரே! வாத்தியாரே!' என்ற சத்தம் தாழ்ந்த குரலில் அடுத்தடுத்துக் கேட்டது. தூங்கிக்கொண்டிருந்த வேலு முதலியார் விழித்துக்கொண்டார். கொஞ்சநேரம் உற்றுக் கேட்டார். அதே சத்தம் திரும்பத் திரும்பக் கேட்கிறது. படுத்த

படி இருந்தவர் எழுந்து ஜன்னலுக்கருகே போனார். சத்தம் முன்னிலும் பலமாய்க் கேட்கிறது. வாத்தியார் வேலு முதலியாருக்கு மனதில் கொஞ்சம் பயம் தோன்றிற்று. மனதைத் திடப்படுத்திக்கொண்டு கூடத்திற்கு வந்து பார்த்தார். பழைய சத்தமே முன்னையினும் தாழ்ந்த குரலில் கேட்கிறது. ஆகவே தெருப்பக்கமிருந்துதான் கூப்பிடுகிறதென்று தெரிந்துகொண்டார். உடனே தமது மனைவியையும், தம்பியையும் எழுப்பி விஷயத்தைச் சொன்னார். அவர்களுக்கும் 'வாத்தியாரே! வாத்தியாரே!' என்று அழைப்பது நன்றாய்க் கேட்கிறது. மனைவியாருக்கு வயிற்றைக் கலக்கிவிட்டது. 'என்னமோ நீங்கள் படித்துவிட்டீர்கள் என்றுதான் பேர். எப்போதும் இப்படி தெய்வத்தைப் பழிக்கலாமா? மனிஷாள்தான் வாத்தியாரென்று எதிர்த்துப் பேச தாக்ஷண்யப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள். தெய்வங்கூட உங்களுக்குப் பயப்படுமா?' என்று முணுமுணுத்த குரலில் மனைவியார் வாத்தியாருக்கு உபதேசித்தார்கள். தம்பியார், அண்ணாத்தையைக் கூப்பிடுவது தன்னை எங்கே பிடித்துக் கொள்ளுகிறதோ என்று பயந்து உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவேயில்லை.

வாத்தியார் முற்றத்திற்கு வந்தார். அவரைக் கூப்பிடும் குரல் நின்றபாடில்லை. 'ஆஹா! ஏதோ தெரியவில்லை. இத்தனை பேரையும் விட்டுவிட்டு என்னை மாத்திரம் கூப்பிடுவானேன்! ஆம். நாம்தானே சாமி ஆடுகிறவர்களை பரிகாசம் செய்வது வழக்கம். அதை எந்த துஷ்ட தேவதையோ தெரிந்துகொண்டாற்போலிருக்கிறது. நமது வாய்க்குறும்பு கடைசியில் பெரிய வம்பாய் வந்து முடிந்ததே!' என்று எண்ணிக் கலங்கினார்.

பின்கட்டில் குடியிருக்கும் சாமிநாதப் பிள்ளை ஒரு முரட்டுப் பேர்வழி. அவருக்குப் 'பயம்' என்னும் பதத்திற்கே அர்த்தம் தெரியாது. வாத்தியார் அவரை 'விரன்மிண்டர்' என்று அழைப்பது வழக்கம். அந்த மிண்டர் இப்போது வாத்தியார் மனதில் தோன்றினார். உடனே நடுக்கமுற்ற உடலோடு பின்கட்டிற்குச் சென்று வழக்கப்படி 'விரன் மிண்டரே' என்று அழைக்காது சாமிநாதரே! சாமிநாதரே! என்று கூப்பிட்டுக்கொண்டே போனார். அவர் கூப்பிட்ட சத்தம் பயத்தினால் வாயைவிட்டு வெளிக்கிளம்பவில்லை. மனக்கலவரத்தில் விரன்மிண்டர் படுக்கை அறையில் புகுந்தார். தட்டுத்தடுமாறிச் சென்று விரன்மிண்டர் மனைவியார்மீது விழுந்துவிட்டார். நடுராத்திரியில் அன்னியர் படுக்கை அறைக்குள் புகுந்து ஒரு பெண்மணியின்மேல் விழுந்தாரென்றால் அவருக்கு என்ன நேர்ந்திருக்குமென நினைக்கிறீர்கள். இல்லை, அப்படி ஒன்றும் நேரவில்லை. வேலு முதலியார் தமது மனைவியையும், தம்பியையும் எழுப்பியபோது விரன்மிண்டர் மனைவியார் விழித்துக்கொண்டு முன் கட்டிற்கு வந்து, யாருமறியாதபடி அங்கு நடந்த அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்தார். வேலு முதலியார் பின்கட்டை நோக்கி வருவதை அறிந்து இருளில் அவர் அறியாதபடித் தம் படுக்கையறைக்கு வந்துவிட்டார். ஆனால் வேலு முதலியார் தம்மேல் அப்படித் தவறி விழுந்து



விடுவாரென்று எதிர்பார்க்கவில்லை. விழுந்துவிட்டார் பயத்தில்; என்ன செய்கிறது பாவம். 'விழுந்துவிட்டார் வேலு முதலியார், விழுந்து விட்டார் வேலு முதலியார்' என்று கூறிக்கொண்டே எழுந்து எலக்டிரிக் ஸ்விச்சைத் தட்டினார். கூச்சலினாலும், விளக்கு வெளிச்சத்தினாலும் விழித்துக்கொண்ட விறன்மிண்டர், விஷயத்தினை மனைவியால் கேட்டுத் தெரிந்துகொண்டார். 'வாத்தியாரே! இனி பயப்படவேண்டாம். நான் இருக்கிறேன்' என்று தைரியங் கூறிவிட்டு தெருப்பக்கம் நடந்தார் விறன்மிண்டர். அவருக்கும் 'வாத்தியாரே, வாத்தியாரே' என்ற சத்தம் நன்றாகக் கேட்டது. தெருக்கதவைத் திறந்துகொண்டு வீதிப்பக்கம் சென்றார். எதிர் வீட்டுத் திண்ணையிலிருந்து அந்த சத்தம் வந்துகொண்டிருந்தது. ஆனால் தெளிவாகக் கேட்கவில்லை. அதே சமயம் எதிர்வீட்டுக் கதவும் பளீரெனத் திறக்கப்பட்டது. ஒரு சிறு விளக்குடன் 'சத்தியாவதி' என்ற பெண் வெளியில் வந்து, 'என்ன, தாத்தா' இரவெல்லாம் சத்தியாவதி, சத்தியாவதி, என்று கத்திக்கொண்டே இருக்கிறீர்களே' என்றாள். 'தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. இதற்காகத்தான் இந்நேரமாகக் கூப்பிட்டுக்கொண்டிருந்தேன்' என்றார் கிழவர்.

---

இனாம்! இனாம்!

ஒரு வருட சந்தா இனாம்.

ஒரு வருட முன் பணத்துடன்
ஐந்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து
அனுப்புவோர்க்கு
ஒரு வருட செங்குந்த மித்திரன்
இனாமாக அனுப்பப்படும்
எங்கே! மித்திரன் வளர்ச்சியில்
உங்களுக்குள்ள அபிமானத்தைக் காட்டுங்கள்

# வாழ்க்கையின் சிறப்பு என்ன?

## சர் ரஹ்மான் பிரசங்கம்

டில்லி சர்வ கலாசாலையில் 12-வது வருஷ பட்டமளிப்பு விழா நடந்தபோது உப அத்யக்ஷகர் சர் அப்துர் ரஹ்மான் பிரசங்கஞ் செய்கையில் கூறியதாவது:—"வாழ்க்கையின் உண்மையான மதிப்பை வெளித்தோற்றமுள்ள சாதனங்களைக் கொண்டு முடிவு கட்ட முடியாதென்பதை நீங்கள் எப்பொழுதும் மறந்துவிடக் கூடாது. வாழ்க்கைக்கு இனிமை தருவது அன்பே. அதற்கு அழகு தருவது பெருந்தன்மையே. அதற்கு சிறப்பையும் பலத்தையும் கொடுப்பது சேவையும் தியாகமுமே. விஷயங்களின் உண்மைத் தன்மையை அறிந்து பாராட்டும் பொருட்டு நாம் நமது வாழ்க்கையைப் பற்றி சரியானதும் உற்சாகம் தருவதுமான மனப்பான்மையைக் கொண்டிருக்கவேண்டும். அருமையை உணர்ந்து பாராட்டும் தன்மையால் தான், வாழ்க்கையின் அர்த்தமும் சிறப்பும் நன்கு விளங்கும். ஒரு பொருளின் அருமை அதன் பருமனையோ தோற்றத்தையோ பொருத்திருக்கவில்லை. ஆனால், அது தமது வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் அழகையும் உயரிய தன்மையையும் உண்டுபண்ணுகின்றதென்பதிலிருந்தே அதன் அருமையை அறிந்து கொள்ளலாகும். நமது வாழ்க்கையின் அருமைக்கு அளவுகோல் தேக பலமோ, செல்வமோ அன்று. கூரிய அறிவும், உயரிய நோக்கமும், சிறந்த குணமுமே அளவுகோலாகும். காரிய சித்தியைக் கொண்டும் எவ்வித முடிவும் செய்யக்கூடாது; நமது அபிலாஷைகள், உறுதி இவைகளின் தன்மையையே பிரதானமாகக் கவனிக்கவேண்டும். உலக விவகாரங்களில் காருண்யத்தையே கடைப்பிடிக்க வேண்டும்."

சர். பஸ்லி ஹுசேன் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்ததாவது:—

"மிக்க தைரியம் உடையவன் எதற்கும் கலங்கமாட்டான். அத்தகைய தைரியம் உண்டுபண்ணுவதே உண்மையான கல்வியின் நோக்கமாகும்."

---

**சுருக்கமாயில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்)**

---

# இந்திய மாதர்கள் தற்கால நிலைமை

## ஸ்ரீமதி. ஜானம்மாள் பிரசங்கம்

7-4-34 மாலை 5-30 மணிக்கு சேலம் புதிய காலேஜ் கட்டடத்தில், சேலம் மாதர் சமாஜத்தினாதரவில் பெண்களின் பொதுக் கூட்டமொன்று ஸ்ரீமதி. சீதம்மாள் தலைமையில் நடைபெற்றது.

சேலம் விஜயம் செய்திருக்கும் காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் சர். வி. பாஷ்யம் அய்யங்காரின் குமாரத்தியான ஸ்ரீமதி ஜானம்மாள் "மாதர்களின் தற்கால நிலைமை" என்பதைப்பற்றி பேசியதின் சுருக்கமாவது:—

வைதிகர்களின் அளவு கடந்த கட்டுப்பாட்டினால் மாதர் சமூகம் முன்னேற்ற மடைய வசதி ஏற்பட வழி இல்லை. மாதர்கள் வேதாந்த விஷயங்களிலேயே மனதைச் செலுத்தி காலத்தை வீணாக்குகின்றார்கள். மூட நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் ஒழித்து, கல்வியை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். அறிவினாலும் ஆண்மையினாலும் மாதர்கள் சமூகத்தை முற்போக்கடையுமாறு செய்ய தேச சேவையில் ஆர்வம் கொண்ட மாதர்கள் முன்வரவேண்டும். கல்வி விஷயத்தில் மிகவும் நன்மை பயக்கக் கூடிய முறையில் கல்வி பயிலவேண்டும். வெறும் பட்டங்களைப் பெற்று தெருவில் நின்று திண்டாடக் கூடாது. மாதர்களுக்கென்று பல சங்கங்களை ஏற்படுத்தி அடிக்கடி எல்லா மாதர்களும் கலந்து பேசுவதால், அறிவு வளர்ச்சியடையும். ஜாதி பிரிவினை என்பதே கிடையாது. ஆண், பெண் என்ற இரண்டு ஜாதிகளைத் தவிர, வேறு ஜாதி கிடையாது. ஒருவருக்கொருவர் ஜாதி, மத வித்தியாசம் பாராட்டக் கூடாது. சுதேசியத்தை எல்லா மாதர்களும் ஆதரிக்கவும், அதன் அபிவிருத்திக்காக பாடுபடவும் வேண்டும். நமது குழந்தைகள் எவ்வளவு அசுத்தமாயும், அரூபியாயுமிருந்தாலும் சந்தோஷப்படுகிறோம்; தள்ளிவிடுவது இல்லை. தாய் அன்புறத் தழுவி முத்தமிடுகின்றாள். அதுபோன்றே, நமது நாட்டில் உற்பத்தியாகும் சாமான்களை நாம் ஆதரிக்க வேண்டும். நமது நாட்டின் பொருளாதார நிலைமை மேம்பாடடைய வேண்டுமானால் சுதேசியம், கத்தர் முதலியவைகளையே ஆதரிக்கவேண்டும். ஆண்களிடம் பெண்கள் பிடிவாதம் செய்து வைரக் கம்மலும், மற்ற நகைகளும் வாங்கி அணிவதை நிறுத்தி, அதே பிடிவாதத்தை சுதேசியத்திற்கும், கத்தரான குடிசைத் தொழிலுக்கும் உபயோகப்




(மாவன்ன)

மு-ா-ா-ஸ்ரீ திருவாரூர் சபாபதி மொதலியாருக்கு குட்டிப்பேடு கொளந்தா மொதலி எழுதியது.

ரொம்ப நமஸ்காரம்.

நான் ஒங்களுக்கு கடுதாசி எழுதனும்னு எத்தனையோ தடவெ நெனச்சேனுங்கோ. நீங்க எல்லா தெரிஞ்சவுங்க; பெரிய மனுஷரு. ஒங்களுக்கு எப்படி எழுதரதுன்னு சும்மா இருந்துட்டேன். ஆனை-வர வர— நீங்க செய்யர வேலெ ரொம்ப பயமா யிருக்குது. இனிமே சும்மா இருந்தா காரியம் மிஞ்சிபூடும்; குடி முழுகி பூடும்; வர்ரது வரட்டுமின்னு இந்தக் கடுதாசி எழுதிபோட்டேன். என்மேலே கோவிச்சிகாமெ கொஞ்ச கவனமா படிச்சி பாருங்கோ. அப்போ நீங்க செய்யாது நியாயமா இல்லெயான்னு நீங்களே தெரிஞ்சிகிவிங்கோ.

சொம்மா கெடந்த சங்கெ ஊதி கெடுத்தா ஆண்டின்னு பெரியவுங்க சொல்லுவாங்க. நம்ம ஜாதி பிள்ளெக இருந்த எடம் தெரியாம இருந்தாங்க. அவுங்களெ ஆகாசத்திலே ஒசத்திப் பூடரேன்னு சொல்லி எல்லா ஊரிலு சங்கம் வச்சிபுட்டிங்க. அதிலே சில பசங்க சேந்துகினு செய்யர காரியம் தெரியுமா? பெரியவங்கள மதிக்கிறதில்லெ. முன்னெல்லா ஊரிலே விபகார வந்தா வயசானவங்க கூட்டங்கூடுவாங்க. ஏதாவது ஊர் கூட்டத்திலெ ஏற்பாடு செய்வாங்க. இப்போ, என்னடான்ன, இந்தப் பசங்க அடிக்கடி கூட்டங் கூடராங்க. அது என்ன விபகாரம் அப்பப்போ வந்துடுதோ தெரியலே. பெரியவங்க காலத்திலெ இந்த மாதிரி சின்ன பசங்க கூட்டங்கூடற வழக்க முண்டா?

மாசாமாச ஒரு பொத்தகம் அனுப்பி போடரிங்க. அது வந்தா பசங்க ரெண்டுநாள் வேலெ செய்யரதில்லெ. அதெ படிச்சிங் கெடக்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

படுத்தினல் மிகவும் நன்மை உண்டாகும். வட்டிக் கேடாக நகைகளை அணிவதோடு, அதைக் காப்பாற்ற வேண்டிய ஒரு வேலையையும் வைத்துக் கொள்ளக் கூடாது. மாதர்கள் முன்னேற்றம் என்பதே ஆண்களை நல்வழிக்குத் திருப்பவே தான் ஏற்பட்டது.



கறுங்க. இது யார் செய்யர வேலெ. கவனர் இவனர் பத்திரிகெ படிக்கணும்.. நமக்கு இது தகுமா? இந்த பொத்தகம் அனுப்பிப் போட்டு வருசத்துக்கு ஒண்ணறை ரூபா கேக்கிறீங்களே; அது ஒங்களுக்கு தருமமா? வேலெ கெட்டு படிக்கிறது மில்லாமெ ரூபா வேறெ கேக்கிறது என்ன நியாயம்? மூக்குப் பொடிக்கி தினம் காலணா ஒணும்; சுருட்டுக்கு காலணா ஒணும்; பொவலகாம்புக்கு காலணா ஒணும். தின சாயந்திர கொஞ்ச தண்ணீ குடிக்கணு. இதுகளுக்கே நாங்க சம்பாதிக்கிற துட்டு போறலெ. ஒங்க பத்திரிகக்கி வேறெ மாசம் ரெண்டணாவுக்கு எங்கே போறது.

அதெ படிச்சிபுட்டு இந்த பசங்க என்னென்ன பேசறுங்க. காத்தாலே எழுந்தா குளிக்கணுமா; சாயந்திரம் கடக்கி போக கூடாதாம். இதெல்லா நம்ம தொழிலுக்கு முடியுமா?

எங்கப்பா, பாட்டன், முப்பாட்ட காலத்திலிருந்து வூட்டிதே ஆடு, கோழி வளக்கிறுங்க. அது இப்போ கூடாதாம். அதெ எப்படியா உட்றது.

பசங்களுக்கு ஊர்லே சொந்த ஒடபொறந்தா பொண்ணு காத்துங் கெடக்குது. அது கூடாது; இந்த ஊர்லே வாண; வேறெ எங்கேன பாரு எங்கிறுங்களே, இது நமக்கு அடுக்குமா?

நம்ம ஜாதிலே, எங்க ஊரிலே, தொப்புளா ஊட்டாரு வேறு, பாப்பாத்தி குடும்பத்தாரு வேறு, மூக்க ஊடு வேறு. அவுங்க எல்லா நம்ம ஜாதிதா. ஊர் கூட்டத்துக்கு எல்லா வருவாங்க. ஆனா, கொள்வன கொடுப்பன இதுவரெ இல்லெ. இப்போ அவுங்களெ ஒண்ணு சேத்துகிணுமினு இந்தப் பசங்க குதிக்கிறுங்க. அதெல்லா முடியுமா?

ஊர்லே, அபராதம் செலுத்தமாட்டேன்னு சொல்லி, அதுக்கோச—மொட்டயானே, ஓட தோச்ச வெலக்கி 47 வருச மாச்சி. அது மொத அவனெ சேர்ந்தவங்க ஒரு கச்சி, நாங்க ஒரு கச்சியா இருக்கிறே. அந்தக் கச்சியெ ஒழிச்சிபூட இந்தப் பசங்க என்னென்னமோ செய்யராங்களே. ஊரெ மதிக்காது போன அந்த மொட்டயானெ எப்படி சேத்துகிறது.

ஊர்லே வருசத்துக்கு ரெண்டு மூணு கூத்து பசங்க கத்துகினு ஆடுவாங்க. வண்ண கூத்தும் வைப்பாங்க. அதெல்லா இந்த காலத்துக்குக் கூடாதின்னு இந்தப் பசங்க ஒளற்றுங்க.

இன்ன கொஞ்ச நாளக்கி ஒங்க பத்திரிகெ வந்தா இந்த மொட்டப் பசங்களெ கையிலே புடிக்கவே முடியாது. ஒங்க பத்திரிகெயெ இனிமே இந்த ஊருக்கு அனுப்பக் கூடாது. இங்கே எப்பவும் பசங்க சங்க கூடக் கூடாது. நீங்க இதெ கவனிக்கா போனா நாடு கூடி நாட்டு கட்டு செய்யப் போறே. முன்னடியெ எழுதிபூட்டே. அப்புற எங்க பேர்லே கஸ்ட கிஸ்ட வாண.

ஒங்களுக்கு பண மிஞ்சி போனா தெனம் ஆளுக்கு ஒரணா கொடுத்தா பொவலெ, சுருட்டு வாங்கிக்கொள்றேம். ஒங்களெ எல்லாரு வாழ்த்துவாங்க. அதெ வுட்டு இனிமே இந்த வம்பு வேலக்கி போகவாணும்னு கும்புடு போட்டு கேட்டுக்கொள்றேன். கடவுள் ஒங்க எல்லாருக்கும் நல்ல புத்தி கொடுத்து இந்த வேலெ யெல்லா செய்யாம தடுப்பாருன்னு நெனக்கிறேன்.

இப்படிக்கு,

குட்டிப்பேடு, 15-5-34

கொளந்தா மொதலி.

# சந்தேகப் பத்தர்

(ஞானி)

நான் ஒரு பெரிய சந்தேகக்காரன். எங்கு சென்றாலும், எதைப் பார்த்தாலும் என் கண்களில் சந்தேகமே புலப்படும். கண்ணாற் கண்டும் தெளியேன்; அறிஞர் விளக்கியும் அறியேன். அத்தகைய சந்தேகம் என்ன என்று தயை செய்து கேட்காதீர்கள்.

கோயிலில் திருவிழா நடக்கிறதே அது யாருக்காக? சுவாமிக்கா, ஆசாமிகளுக்கா? வெடி மருந்து கொண்டு மிகுதியும் பணத்தைச் செலவிட்டு வேடிக்கைகள் செய்வது யாருக்கு? அது செய்ய வேண்டியது அவசியந்தானா? கேளிக்கைகள் எதற்கு? அதைக் கண்டு களிப்பவர் சாமியா? ஆசாமியா?

சில ஆயிரம் வருடங்கட்கு முன் கோயில் உண்டோ, இல்லையோ என ஒருவரும் நிச்சயித்துக் கூற முடியவில்லை. திருவிழாவின் நிலையும் அவ்வாறே. அப்பழைய காலத்தில் இயற்கைத் தோற்றங்களையே இறையென வழிபட்டு வந்தனர். நாள் செல்லச் செல்ல நாகரீகம் முற்ற முற்ற மக்கள் ஒழுக்கங்களிலும் நடையுடை பாவனைகளிலும் மாறுதல் உண்டாயிற்று. அதற்கேற்பத் தெய்வ வழிபாட்டிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஒப்புடையன் அல்லன், ஓரூரன் அல்லன், ஒருருவனல்லன், உவமனில்லியாகிய இறைவனுக்குப் பாமரர்களின் பொருட்டு ஊரும் உருவமும் பேரும் பிறவும் கற்பிக்கப் பட்டன. பின்னர் எங்ஙனும் உருவ வழிபாடு மிகுந்தது. ஆலயங்கள் அரசர்களால் சமைக்கப்பட்டன. உருவ வழிபாடு தோன்றியவுடன் பல்வேறு உருவுடைய பல கடவுளர் தோன்றினர். அதனால், பல்வேறு சமயமும் தோன்றலாயின. ஒற்றுமையுடனிருந்த இந்திய சமூகம் பலவகை மதத்தினராகவும் சமயத்தினராகவும் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு சமயத்தினரும் ஏனைய சமயத்தினர் காணுமாறு திருவிழாக்கள் நடத்தினர். அவ்வழக்கம் இன்றும் நடைபெறுகின்றது. ஆண்டு தோறும் நடைபெறும் விழாவினைத் தரிசிக்க ஆடவரும் பெண்டிரும் ஏராளமாய்ச் செல்லுகிறார்கள். போகட்டும்; மகம்மதியர், கிருஸ்தவர் போன்று இந்துக்கள் கோயில்களுக்கு ஏராளமாய்ச் செல்லும் வழக்கமில்லையாதலால் திருவிழாச் சமயத்திலாவது சென்று தரிசனம் செய்கின்றனரே என்று எனக்குச் சந்தோஷந்தான். ஆனால் வாசகர்களே! என் பெயர் சந்தேகப் பத்தர் என்பதை மறந்து விடாதீர்கள். திருவிழா கண்டு களிக்கச் செல்லும் மக்களின் நிலையையும், நோக்கத்தையும் பார்க்க என் சந்தோஷமெல்லாம் சந்தேகமாக மாறிவிடுகின்றது.

திருவிழா என்றால் புதியதொரு உவகை மக்கள் மனதில் உண்டாகின்றதே, அதற்குக் காரணமென்ன? எந்தக் கோயிலானாலும் திருவிழா என்றால் ஓரே கூட்டம் சேர்ந்து விடுகின்றதே, அது சுவாமி



தரிசனத்திற்கா, அல்லது வேறு விசேடங்களுக்கா? இந்த சந்தேகம் என்னை சதா வாட்டுகின்றது.

நான் நேரில் கண்டதை உதாரணமாகக் கூறுகிறேன். திருப்பாதிரிப் புலியூரில் சென்ற வருடத்தில் பிரம்மோற்சவம் நடந்தது. ஆறாம் திருவிழாவன்று சுவாமி வெள்ளி இரதத்திலும் அம்மன் தங்கப் பல்லக்கிலும் ஊர்வலம் வந்தன. சுவாமியின் அருகில் எவ்வளவு கூட்டம் இருந்தது தெரியுமா! சுவாமியின் விருதுகளைச் சுமந்தவர்கள், தீவட்டி பிடித்தவன், இரண்டொரு பார்ப்பனர், நாலைந்து பக்தர்களைத் தவிர வேறு ஒருவரையும் காணவில்லை. ஆனால் சங்கீதக் கச்சேரி நடந்த இடத்திலோ ஒரு பெருங்கும்பல். அபாயம் நேரக்கூடிய பாண வேடிக்கைகள் நடந்த இடத்திலோ ஒரே கூட்டம் ஒருவரையொருவர் இடித்துக்கொண்டு நின்றிருந்தது. கேளிக்கை நடந்த இடத்தில் வேறொரு கூட்டம். பாணம் பற்றவைக்கப்பட்டதுதான் தாமதம். எல்லோரும் இடித்துத் தள்ளிக்கொண்டு ஓட ஆரம்பித்தனர். பலரது கால் விரல்கள் நசுங்கின; பலர் துணிகளை இழந்தனர். நெருப்புப் பொறி எங்கும் பரந்தது. புகையும் கண்ணைக் கவ்வியது. இத்தருணத்தில் ஜல்லடைப்பாணம் தப்பி ஜனங்கள்பால் திரும்பியது. அப்பா, நான் பட்ட பாட்டை என்னவென்று சொல்லுவேன். நான் தப்பியது தம்பிரான் புண்ணியமாயிற்று. பாணமும் ஜனங்களிடம் வைத்த அன்பு மிகுதியினால் ஒரு ஆடவரை ஆலிங்கனம் செய்தது. அவரும் துடிதுடித்துக் கீழே விழுந்தார். ஆஸ்பத்திரியில் பல மாதங்கள் இருந்ததற்குப் பின் ஒரு கால் ஊனத்துடன் இப்போது வீட்டிலேயே முடங்கிக் கிடக்கிறார்.

இஃதிவ்வாறாக, பெண்டிர் நிலையினைப் பார்ப்போம். வீட்டில் புருடனெதிரில் ஒரு சிறு நகையும் தரித்துக் கொள்ளாத பெண்கள் திருவிழாவிற்குச் செல்லும்போது தம்மை ஆடை ஆபரணங்களால் மிகுதியும் அலங்கரித்துச் செல்லுவது எதற்காக? தங்கள் வேஷங்களைக் கண்டு பிறர் மெச்சவா, அல்லது சுவாமி தரிசனத்திற்கே இவை அவசியமா? 'தம்மை அலங்கரித்துக்கொண்டு வெளியில் செல்லும் பெண்கள், வழியில் போவோர் வருவோரது மனத்தைக் கவர்வதற்காக பலகாரக் கடையில் அழகாக அடுக்கி வைக்கப்பட்ட பட்சணங்களை நிகர்ப்பர்' என மகன் லால் காந்தி கூறியிருப்பது மிகவும் நியாயமேயன்றோ? நவரத்தினங்கள் ஜ்வலிக்கவும் பூம்பட்டாடை கள் அழகு செய்யவும் செல்லும் பெண்களை 'திருடர் போஷிணி' என்று ஏன் சொல்லக்கூடாது? திருடுவதற்கு சாதனம் செய்து கொடுத்து விட்டு 'திருடாதே' என்று உபதேசம் செய்வது, கள்கடையை அனைவருக்கும் இனமாகத் திறந்துவிட்டு 'கள் குடிக்காதே' என்று உபதேசிப்பது போன்றல்லவா இருக்கிறது. அபரிமிதமான நகையைப் பார்த்தவுடன் எந்த ஏழையின் மனந்தான் கவற்சியடையாது. அதுவும், திருட்டுத் தொழிலுடையாரின் மனோநிலை அந்நகைகளைப் பார்த்ததும் எவ்வாறிருக்கும்? சந்தர்ப்பம் பார்த்து களவாடுவதோடு உயிருக்கும் சில சமயங்களில் ஊறுசெய்ய வேண்டியவனாகின்றான். இக்கஷ்டம் நேர்ந்தபின் கதறுவதால் யாது பயன்?

இது மட்டுமா? பெருங்கூட்டத்தினால் ஆண்கள் தனித்துப் பிரிந்தால் வீடு வந்து சேர்ந்துவிடக்கூடும். ஆனால், பெண்கள் பிரிந்தாலோ சில அயோக்கியர்களால் அவர்களுக்கு எத்தகைய துன்பமும் இழி தகைமையும் ஏற்படக்கூடுமென்பது மிகப்பெரிய சந்தேகம்.

கன்னிப் பெண்கள் வீட்டி லிருக்கையில் தெரு வாசற்படி யருகும் செல்லக்கூடாதெனக் கடுங்காவல் தண்டனை விதித்து வாழும் தாய் தந்தையர், அவர்களை திருவிழாக்களுக்கு தாராளமாய் அழைத்துச் செல்லுவதின் காரணமென்ன? அவ்வாறு அழைத்துச் சென்றதால் பலருக்கு நேர்ந்த துன்பங்களையும் அவமானத்தையும் பழிப்பையும் பார்த்திருந்தும் மீண்டும் மற்றவர்கள் அழைத்துச் செல்வது பெரிய சந்தேகத்தைக் கிளப்புகின்றது.

இன்னும், சிசுக்களை ஏந்திச் செல்லும் அறிவீனர்களை என்னென்பது? எத்தனை குழந்தைகள் நசுங்கி அதேயிடத்தில் மோட்சமடைகின்றன. இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்தும் மறுபடியும் அஜாக்கிரதையாய் நடந்துகொள்வதின் காரணமென்ன?

எல்லாவற்றினும் கடைசியாக ஒரு சந்தேகம். முதலில் சுவாமியும் அம்மனும் ஒரே வாகனத்தில் ஊர்வலம் வந்தன. பிறகு திருமணம் நடந்தது. காதலின் பின் கங்கணம் (Love and Marry) என்ற கொள்கைதான் சுவாமிக்கும் உடன்பாடோ?

இந்த சந்தேகங்களை யெல்லாம் விலக்கி என்பெயரையும் மாற்றி 'நம்பிக்கைக் கோமான்' என்ற பெயரை எனக்கு எவரேனும் சூட்டுவீர்களா?

---

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

# அதிசயம் அற்புதம் ஆச்சரியம்

### இயந்திர மூக்கு

ஹார்வர்டு சர்வகலாசாலைப் பண்டிதர்கள் பலர் சேர்ந்து ஒரு யந்திர மூக்கு கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை அணிந்துகொள்வதால் வாசனையை விரைவில் அறிந்து கொள்ளலாம். மயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகளை முகர்வதனாலும், துர்நாற்றத்தை முகர்வதாலும் இம்மூக்குகளால் கெடுதி நேர்வதில்லையாம்.

### பாடும் கிளி

டர்ஹாம் பிரதேசத்திலுள்ள சவுத் ஸ்டான்லி என்னும் நகரில் ஸ்ரீமதி இ. மார்ச் என்பவள் வளர்த்துவரும் கிளி அவளோடு சேர்ந்து பிரார்த்தனை செய்கிறது. கீர்த்தனைகளைப் பாடுகிறது. காலையில் அவளைப் பார்த்ததும் 'காலை ஆகாரம் எங்கே' எனக் கேட்கிறது. இரவில் படுக்கைக்குப் போகும்போது 'குட் நைட், அம்மா' என்ச் சொல்லி முத்தமிடுகிறது. இத்தகைய சக்தி கிளிக்கு எப்படி உண்டாயிற்றென அனைவரும் ஆச்சரியப்படுகின்றனர்.

### மனைவியை மாற்றிக்கொண்டனர்

அமெரிக்காவில் கலோ என்ற கிராமத்தில் சுரங்கத்தில் வேலை செய்யும் இரு மாற்றான் சகோதரர்கள் கல்யாணஞ் செய்துகொண்டு 12 வருடகாலமாகியும் குடும்ப ஒற்றுமையின்றி தமக்கும் மனைவிகளுக்கும் அடிக்கடி சச்சரவு நேர்வதைக் குறித்து கலந்து யோசித்து, தமது மனைவிகளை மாற்றிக் கொள்வதென முடிவு செய்தனர். அவர்கள் அவ்வாறு மனைவிகளை மாற்றிக்கொள்ளும்போது ஒவ்வொருவருக்கும் 3 குழந்தைகள் இருந்தன. அவைகளும் தாயுடன் மாறிவிட்டன. இப்போது அவர்கள் சிறிதும் சச்சரவின்றி ஆனந்தமாக இல்லறம் நடத்தி வருகிறார்களாம்.

### நாயினால் விவாக ரத்து

கலிபோர்னியாவில் ஒருவர் தனது மனைவியைக் காட்டிலும் தன் நாயினிடந்தான் தனக்கு விருப்பம் அதிகம் எனச் சொல்லியதை மனைவி சகிக்காமல் விவாக விடுதலை செய்துகொண்டார்.

### பக்கிரிக்குப் பட்டம் கிடைத்தது

இந்தியாவுக்கு வடக்கே ஆப்கானிஸ்தானத்திற்கும் ரஷ்யாவுக்குமிடையே ஷங்கியாங் என்ற பிரதேசம் இருக்கிறது. இங்கு 20 லட்சம் சீனர்கள் வசிக்கிறார்கள். இந்தப் பிரதேசத்திற்கு இங்கிலாந்தில் ஊறுகாய் வியாபாரம் செய்துவரும் ஒருவரது மகனாகிய ஹைல்டிரேக் என்பவர் கிருஸ்து மதப் பிரசாரம் செய்யச் சென்றார். இவரது பேச்சு வன்மையைக்கண்டு மகிழ்ந்த அந்தப் பிரதேச ஜனங்கள் இவரையே தமக்கு அரசராக இருக்கும்படி வேண்டினர். இவரும் இசைந்துவிட்டார்.

இவர் தமது மனைவியையும், இரு குமாரர்களையும் உடனே புறப்பட்டு வரும்படி இங்கிலாந்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

இவர் அப்பிரதேசத்தை பிரிட்டிஷ் இன்ஜினீர்களைக் கொண்டு பல கைத்தொழிற்சாலைகள் அமைக்கவும், அநேக சீர்திருத்தங்கள் செய்யவும் யோசித்து வருகிறாராம்.

### மாமியாள் தினம்

டெக்சாசில் அமாரில்லோ என்னுமிடத்தில் மருமகன்மார்களனைவரும் வருடத்திற் கொருமுறை 'மாமியார் தினம்' கொண்டாடுகிறார்கள். அன்று மருமகன்மார்கள் தங்களை அலங்காரஞ் செய்து கொண்டு மாமியார்களிடம் சென்று, புட்பங்கள் கொடுத்துத் தங்கள் மரியாதையைக் காட்டிக்கொள்ளுகிறார்களாம்.

### அதிசய ஜன்னல்

காற்ரேட்ட நிபுணர்கள் சில அபூர்வ ஜன்னல்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதன் மூலமாக வெய்யில் காலத்தில் உஷ்ணக் காற்றும், மழைக்காலத்தில் குளிர் காற்றும் நுழையாதாம்.

### சோதிட பறவை

50 வருடங்களாக டர்ஹாமில் பீமிஷ் என்னுமிடத்திலுள்ள ஒரு மரத்தில் வசித்து வந்த பறவைகளனைத்தும் ஒருநாள் கூட்டங்கூடி ஆலோசித்தபின் வேறு ஒரு மரத்திற்குச் சென்று குடியேறி விட்டன. அவை புதுமரத்தில் குடியேறின பின் இரண்டொரு தினத்தில் பழைய மரம் வேருடன் முறிந்து விழுந்து விட்டது. பறவைகளின் இந்த உணர்ச்சியை என்னெனக் கூறுவது.

### மீன் மழை

ஓஹியோ நகருக்கு அருகிலுள்ள கிளிண்டன் என்னும் துறைமுகத்தில் பெய்த பெருமழையில் மீன்கள் ஏராளமாய் விழுந்தனவாம்.

### பனியைத்தடுக்கும் வெடிகுண்டு

பிரான்சில், திராட்சைச் செடிகள் பனியினால் கெட்டுவிடாதபடி தடுக்க ஒருவித வெடிகுண்டு உபயோகிக்கிறார்கள். இந்த குண்டுகளை செடியின் பக்கத்தில் எறிந்தால் 30 அடி உயரத்திற்கு ஒரு புகை கிளம்பி 20 ஏக்கர் விஸ்தீரணத்துக்குப் பரவுகிறது. இந்தப் புகை பனியைச் செடியின் மீது விழாது பாதுகாக்கிறதாம்.

### மலையா? மனிதனா?

செயிண்ட் லூயிஸ் நகரில் 15 வயதுள்ள ஒரு சிறுவன் இருக்கிறான். இவன் 8 அடி உயரமும் 362 ராத்தல் நிறையும் இருக்கிறான். எனவே இவனை 'சிறுமலை' என அனைவரும் அழைக்கிறார்களாம்.

### ரேடியோ ஓட்டும் படகு

கரையிலிருந்தபடியே சமுத்திரங்களிலும் நதிகளிலும் படகுகளை ரேடியோ மூலமாக ஓட்டக்கூடிய முறையை ஸ்ரீ ராபர்ட். எச். பாக்கார்ட் கண்டு பிடித்திருக்கிறார்.

## கதம்ப விநியோகம்

பிரெஞ்சு சர்க்கார் மந்திரிகள் தங்கள் சம்பளத்தில் 100-க்கு 15 வீதம் குறைத்துக்கொள்ள சம்மதித்துள்ளனராம்.

நத்தைகள் 5 வருடங்களுக்கு ஒரேயடியாக ஆகாரம் சாப்பிடாமல் ஜீவித்திருக்க முடியுமாம்.

எல்லா உலோகங்களிலும் மிகக் கடினமான ஒஸ்மியம் என்னும் புதிய உலோகம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஈயத்தைவிட இது 100-க்கு 98 வீதம் அதிக கனமுடையது.

கார்லைல் என்ற இடத்தில் பிரட்ராப்சன் என்பவர் ஒரு சிறிய 'டெரியர்' நாயொன்றை 1250 பொன்னுக்கு விற்றனராம்.

44 வருடங்களாக லாயிட் ஜார்ஜ் தொடர்ச்சியாகப் பார்லிமெண்டு அங்கத்தினராக இருந்து வருகிறார்.

7-1-1834-ல் பிலிப்ரீஸ் என்பவர் டெலிபோனைக் கண்டுபிடித்தார். எனவே, டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டு சரியாக 100 வருடங்களாகின்றன.

பிரிட்டிஷ் மன்னருக்கு நேபாள அரசர் 'ஓஜஸ்வி ராஜன்யா' என்ற பட்டம் அளிக்கப்போகிறார். இதன் பொருள் 'ஊக்கமிகுந்த அரசர்' என்பதாம்.

ஜப்பானில் நிமிஷத்துக்கு 4 குழந்தைகள் பிறக்கின்றன.

மெக்ஸிகோவில் டெகுவான் டேபெக் என்னுமிடத்தில் ஆண்களைவிட பெண்கள் 5 மடங்கு அதிகமாயிருக்கிறார்களாம்.

ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் 75 வயதுடைய ஜே. இ. ஜான்சனுக்கு மூன்றாவது முறையாக பற்கள் விழுந்து முளைக்கின்றனவாம்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இயற்கையாக உள்ள பிரகாசம் குறைந்து வருகிறதாம்.

ரோடி தீவுகளிலுள்ள கொக்குகளில் பலவற்றிற்கு ஒரே கால் இருக்கிறதாம்.

உலகத்தில் தற்போது 3 கோடியே 40 லட்சம் டெலிபோன்கள் இருக்கின்றன.

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஆலிந்தா என்னுமிடத்தில் 81000 அடி ஆழமுள்ள கிணறு ஒன்று இருக்கிறது.

---

இந்தியாவிலுள்ள முனிசிபாலிடிகளில் மிகப் பழையது 1834-ம் வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆமதாபாத் முனிசிபாலிடியே யாகும்.

---

36 வயதுள்ள ஹூஸ்ஸேயின் பே என்னும் துருக்கியனுடைய உயரம் 14 அங்குலமே இருக்கிறதாம்.

---

லண்டனிலுள்ள 'பிக்பென்' என்ற கெடிகாரத்தைப் பிரித்து எண்ணெயிட்டு சுத்தி செய்ய 2 மாத காலமும் 36000 ரூபாயும் பிடிக்குமாம்.

---

ஸ்ரீ ஹெர்வி ஆலென் என்னும் அமெரிக்க நூலாசிரியரே அதிக சிகரெட்டுகளை உபயோகிப்பவராவர். இவர் நாளொன்றுக்கு 840 சிகரெட்டுகள் பிடிக்கிறாராம்.

---

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்தபின் குடிவெறியால் மாண்டவர்களின் தொகை குறைந்திருக்கிறதாம்.

---

லாங் தீவில் மனோமா என்னுமிடத்தில் ஒரு வழக்கில் ஆஜரான ஜூரிகள் தங்கள் அபிப்பிராயத்தைக் கலந்து யோசிப்பதற்காக ஜூரிகளின் அறைக்குள் சென்றனர். அவர்கள் உள்ளே சென்று 5 மணி நேரமாகியும் வராமையால் நீதிபதி உள்ளே சென்று பார்க்க நேர்ந்தது. அச்சமயம் ஜூரிகள் அங்கே சீட்டாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து நீதிபதி திடுக்கிட்டுப் போனாராம்.

---

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கட்டுரைகள் வரிக்கு வரி இடம் விட்டு, தெளிவான எழுத்தில், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்ட வல்லதும், மன உற்சாகத்தை எழுப்ப வல்லதும், சிரிப்பை ஊட்டத் தக்கதுமாய் மித்திரனில் 2 அல்லது 3 பக்கத்துக்கு மேற்படாமல் இருக்கக்கூடிய கட்டுரைகளுக்கே பிரசுரிப்பதில் முதன்மை தரப்படும்.

3. கட்டுரையோடு தனிக் கடிதங்கள் எழுத வேண்டியதில்லை. எழுதுபவரின் பெயரும் விலாசமும் மட்டும் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுதல் போதுமானது.

4. கட்டுரைகளெல்லாம் 'ஆசிரியர்' விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

## செங்குந்த யாத்திரைவாசி

(முன் இதழ் 214-ம் பக்கத் தொடர்ச்சி)

"தமது கையில் கிடைத்ததைக் கொண்டுபோய் குருதட்சிணையாகக் கொடுத்து சுவாமிகளைக் கோபித்துக்கொள்ள வேண்டாமெனச் சமாதானம் கூறிவிட்டு, அந்த ஏமாந்த சோணகிரிகள் என்னிடம் வந்து கெஞ்சிக்கூத்தாடினார்கள். எனக்கு ஒரு மாதிரியாய் விட்டது. என்ன! ஒரு குருக்களாயிருப்பவர் பட்டம் பகலில் பகிரங்கமாய்ப் பொய் சொல்வாரா, ஏதாவது ஆதாரம் அவருக்கு இருக்கத்தான் வேண்டும். எதற்கும் அவர் சொல்லுகிற கிரயபத்திரத்தை வாங்கிப்பார்ப்போம் என்று எண்ணி இரண்டு தெரு பெரியதனக்காரர்களை அழைத்துக்கொண்டு சாமியாரிடம் போய் கிரயபத்திரத்தைக் காட்டும்படி நாங்கள் கேட்டோம். அதற்கு அவர், இதோ இருக்கிறது, அதோ இருக்கிறது என்று தாத்து மாத்துகள் கூறினார். 'கட்டாயம் காட்டியேதான் ஆகவேண்டும்; அது எங்களுக்குத் திருப்தியாயிருக்குமானால் நாங்கள் தங்களுக்குத் தக்க மரியாதை செய்கிறோம்' என்றுசொன்னோம்'அப்படியானால் அது இப்பெட்டியிலுள்ள ரிகார்டுகளோடு கலந்து கிடக்கிறது; எடுத்து வைக்கிறேன். நாளை சாயங்காலம வாருங்கள்' என்று சாமியார் விடை பகர்ந்தார்.

ஊசலாடும் மனத்தோடு நாங்கள் திரும்பினோம். வழியில் ஒரு பையன் ஓடிவந்து 'குருக்களம்மாள் வந்திருக்கிறார்கள்; வீட்டில் உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்கள்' என்றான். நான் விரைந்து சென்று குருக்களம்மாளைக் கண்டு வணங்கினேன். அம்மாள் என்னை ஆசீர்வதித்து விபூதிப்பிரசாதம் கொடுத்தார்கள். அம்மாள் வந்திருக்கிற செய்தி ஊர்முழுதும் பரவிற்று. குலாகுலத்தோடு ஊர்முழுதும் திரண்டுவந்து எங்கள் வீட்டில் சேர்ந்தது. அம்மாள் அமங்கலியான பிறகு பாராத பலர், தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். கணவனை இழந்த ஒருமாதரசியின் நெஞ்சமானது கல்லாயிருப்பினும் அங்கு சொல்லிய அநுதாபச்சொற்களைக் கேட்டு நெக்குவிட்டு உடைந்து உருகி நீராய்ப் பெருகிப் போயிருக்கவேண்டுமே யல்லது வேறொன்றும் நிகழ்ந்திராது. ஆனால் எங்கள் குருக்களம்மாள் எல்லாவற்றையும் மௌனமாயிருந்து கேட்டு என்ன செய்தார்கள். 'எனதன்பார்ந்த சகோதரர்களே, உங்களில் அநேகர் உங்கள் குருவின் அரிய உபதேச மொழிகளை நிராகரித்தவர்களானீர்கள். உலக வாழ்க்கை அநித்தியமானது. மனிதர் பிறப்பதும் இறப்பதும் சகஜமன்றோ. அவரது அரிய சொற்கள் அனைத்தும் கல்லின்மேல் விதைத்த நெல்லாயினவே. எனது ஆருயிராகிய அவர் இறுதி காலத்தில் கலங்காதே என்று கையமர்த்தினார். நான் அவ்வழியே நின்றேன். பிற மாதர்களைப் போல் நான் கலக்கமுற்றுக் கதறி இருப்பேனாயின் அவருக்குரிய மனைவியென்று என்னைச் சொல்லவியலாது.' என விடையிறுத்தார்கள். பலர் மூக்கின்மேல் விரல் வைத்துக் கொண்டனர். சிலர் இவளொரு கல் நெஞ்சக்காரி எனப் பழித்தார்

கள். விஷயம் அறிந்த சிலர் சந்தோஷப்பட்டு 'தாயே! தங்கள் செந்தாமரை போன்ற வாயிலிருந்து உதிர்ந்த இவ்வரிய முத்துக்களே எங்களுக்குப் போதியவை யாகும். வேறு குரு தங்கள் வாழ்நாள் வரையில் வேண்டியதில்லை. பின்னர் தங்கள் உத்தரவின்படி நடப்போம்' என்று சொன்னார்கள். பின்பு, சீடர்களை வேறொருவருக்குக் கிரயம் செய்து விட்டதைப்பற்றி விசாரித்தோம். அம்மையார் 'யாதொன்றும் அவ்வாறு நடக்கவில்லை. இனியும் நடவாது. உங்களுக்கு மனத்தாங்கலை உண்டாக்கக்கூடிய எதையும் நான் செய்யச் சம்மதியேன்' என்றார்கள். இரவு மணி 10 ஆய்விட்டது. அநேகருக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது. உடனே ஆசாமியார் இருந்த இடத்திற்கு ஆள்விட்டார்கள். அங்கு ஆசாமி இல்லை. அவர் மனைவி அவர் அடுத்த ஊருக்குப் போயிருக்கிறாரென்றும், விடியுமுன் வந்துவிடுவாரென்றும் சொன்னார்களாம். விடிந்ததும் அவரையும் அவர் குடும்பத்தவரையும் அங்கு காணவில்லை'' என மொழிந்தார். வரவர கூட்டம் பெருகி திண்ணை நிறைந்துவிட்டது.

கூட்டத்திலிருந்த ஒருவர் இந்த செங்குந்தர்கள் தவிர மற்ற இனத்தவர்கள் இப்படி குருக்கள்மாரை வைத்துக்கொண்டு அவஸ்தைப் படுவதைக் காணோமே. இவர்களது அற்ப வருமானத்திற்கு அங்கங்கே கோயில், அங்கங்கே குருக்கள், அங்கங்கே கோயில் வழக்கு. எத்தனைவரி. இதனாலல்லவோ இவர்கள் நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் செல்லுகிறார்கள். இவர்கள் ஏமாந்த சோணகிரிகள் என்பதை அறிந்த தேசிகன் அல்லது குருக்கள் என்போர் என்னென்ன விதத்தில் இவர்களை ஏமாற்றுகிறார்கள். நம்மவர்களையே ஏன் நாம் குருக்கள்மாராக வைத்துக்கொள்ளலாகாது. ('அப்படியும் அநேகர் இருக்கிறார்கள்' என்ற சத்தம்) இல்லை, இல்லை. அவர்களை நானு மறிவேன். அவர்கள், சீடர்களைத் தொட்டால் தீட்டு, அவர்கள்வீட்டில் சாப்பிடமாட்டோம் என்னும் கொள்கை யுடையவர்களாய் நம்மைத் தங்களினும் தாழ்ந்தவர்கள் என்று பிறர் கருதுமாறு நடந்து கொள்ளுகிறார்கள். அது கூடாது ('சீடர்களும் அவர்களைப்போல் சைவாச்சார முடையவர்களா யிருந்தாலல்லவோ' என்ற சத்தம்) ஆம், அதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். குருமார்கள் எதற்காக ஏற்பட்டிருக்கிறார்கள். சீடர்கள் ஆச்சாரமாயில்லை யென்றால் அது யாருடைய குற்றம். இதைவிட குருவிற்கு என்னவேலை. குருதக்ஷணையைத் தவறாமல் வசூலித்துக்கொண்டு போய்விடுவதோடு அவர்கள் கடமை முடிந்து விடுகிறதா? அது ஒருபுறமிருக்க, பரம்பரையாக சைவாச்சாரத்தை மேற்கொண்டொழுகும் செங்குந்தர்கள் பல்லாயிரக்கணக்கிலிருக்கிறார்களல்லவா? அவர்களிடத்தில் ஏன் இன குருக்கள்மார் சாப்பிடக்கூடாது? ஆகவே இப்போதுள்ள நமது அன்னிய இனத்தைச் சார்ந்த குருமார்களும் நம்மினத்தைச் சார்ந்த குருமார்களும் எடையில் ஒருவருக்கொருவர் வித்தியாசப் பட்டவர்களல்லர் என்றாலும் குற்றம் நம்முடையதே. நம்மிடத்திலிருந்து வருவாயை எதிர்பார்த்துப் பிழைக்கும் இப்படிப்பட்டவர்களால் நாம் ஒருபோதும் சீர்திருத்தம் அடையமுடியாது. சீர்திருத்த முயற்சி நம்மிடத்திலிருந்தே எழவேண்டும்.



சில மாதங்களுக்கு முன் நான் எங்களத்தான் வீட்டிற்கு—தச்சவாடிக்கு—போயிருந்தேன். அவர் தகப்பனார் பிரக்யாதியாய் வாழ்ந்தவரென்று எல்லோருக்குந் தெரியுமே. நான் போயிருந்த சமயம், அத்தானைத் தேடிக்கொண்டு சாத்தம்பாடி (தச்சவாடிக்கு $4\frac{1}{2}$மைல் கிழக்கே யுள்ளது) யிலிருந்து ஒரு தேசிகர் வந்து அத்தானைக் கண்டு 'முதலியாரே! என்னை இன்னாரென்று அறிவீர்களா?' என்று கேட்டார். அதற்கு அத்தான் 'வாருங்கள், வாருங்கள்; இப்படி உட்காருங்கள் சாத்தம்பாடி தேசிகரே. என்னையே நான் அறியவில்லையே, தங்களை நான் எப்படி அறிவேன். கேள்வி பலமா யிருக்கிறதே' என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார். 'ஆம், பலமான கேள்விதான். என்னை இன்னாரென்று அறிவிக்கும் பொருட்டே இங்கு வந்துள்ளேன்' என்று புன்னகையோடு தம் கையிலிருந்த ஒருபழைய ஓலைச்சுவடியை நீட்டி 'இதைப் படித்துப்பாரும்' என்றார். 'இதைப்பற்றி யென்ன? இதில் எங்கள் நான்காம் பாட்டனாரிலிருந்து என் வரையில், பெயர்கள் விலாசத்தோடு குறித்திருக்கிறது', என்றார் அத்தான்.

சா. தேசிகர்—இப்போதாவது என்னைத் தெரிந்து கொண்டீர்களா?

அத்தான்—உங்களை எப்படி தெரிந்து கொள்ளுகிறது? எங்கள் வீட்டுப் பெரியவர்கள் பெயர்கள்தான் இதிலிருக்கிறது.

சா. தேசிகர்—உங்கள் முன்னோர் பெயரை எல்லாரும் குறித்து வைத்திருப்பார்களா? எல்லாருக்கும் தெரியுமா?

அத்தான்—எங்கள் வீட்டிலுள்ள கணக்குப் புத்தகங்களிலும், ஏனைய ரிகார்டுகளிலும் பொதிந்து கிடக்கின்றன. இவ்வூரிலும், அடுத்த ஊர்களிலும் வயது சென்றவர்கள் அறிவார்கள்.

சா. தேசிகர்—முதலியாருக்கு நான்......சொல்லவந்தது அது அல்ல. முதலியார் குடும்பத்தார் எங்கள் மடத்து சிஷ்யாக்கள் என்பதைத்தான் சொல்லவந்தேன். என் தகப்பனார் காலமான பிறகு...... இந்த ரிகார்டுகளெல்லாம் எங்கெங்கேயோ கிடந்தன. தகப்பனார்கூட சொல்லிக்கொண்டுதா னிருந்தார். நானும் எங்கெங்கேயோ என்னென்ன வேலையாகவோ இருந்துவிட்டேன். இந்த சுவடி இப்போது கிடைத்தது. தாங்கள் என்னுடைய சிஷ்யனென்று அறிந்து வெகு சந்தோஷப்பட்டேன். அதைத்தான் முதலியாருக்குத் தெரிவிக்க வந்தேன்.

அத்தான்—(கோபத்தோடு கையிலிருந்த சுவடியை வீசி எறிந்துவிட்டு) உங்களை யெல்லாம் நான் நன்கு அறிவேன் வெகுநாளாய். அடுத்த ஊரார் என்ற முறையிலும், என்னைப்போல் ஒரு மனிதனென்ற முறையிலும் உமக்கு மரியாதைசெய்ய நான் தயாராயிருக்கிறேன். என்னால் கூடிய உதவி தேவையிருந்தால் செய்யவும் தயாராயிருக்கிறேன். ஆனால்........

சா. தேசிகர்—குருத்துரோ......

அத்தான்—வாயைமூடும். என்னையா ஏமாற்றி மிரட்டப் பார்க்கிறீர்? இந்த பேச்சைப் பேசிக்கொண்டு இங்கு இராதீர். இதை அடி

யோடு மறந்துவிட்டு வேறு சமயம் வாருங்கள். உமக்குத் தேவையானதைச் செய்கிறேன். இந்தப் பித்தலாட்டப் பேச்சை மாத்திரம் கொண்டு வராதீர்.

சா. தேசிகர்—முதலியாருக்குக் கோபம் வர்றமாதிரி செய்துவிட்டேன். முதலியாரை இன்னொரு சமயம் வந்து பார்க்கிறேன். போய் வருகிறேன். '

அத்தான், அவர்போனபிறகு 'இந்த தேசிகர்கள் நம்மவர்களை எப்படி எமாற்றிப் பொருள் பறிக்கிறார்கள் என்பதைப்பற்றியும், தங்கள் குருக்கள் இன்ன ஊரிலிருக்கிறார், அவர்கள் சம்பந்தமான 100 வருஷத்திற்குமேற்பட்ட கணக்கு தங்கள் வீட்டில் இன்னும் இருக்கிறது என்பதைப்பற்றியும் சா. தேசிகர் குடும்பத்திற்கும் தம் குடும்பத்திற்கும் தமது தகப்பனார்காலத்தில் சிநேகம் உண்டேயொழிய வேறு விதமாய் குருசிஷ்யன் என்ற விதமாய் யாதொன்றும் இருந்ததே இல்லை யென்பதைப்பற்றியும் நெடுநேரம் தெளிவாக எடுத்துக்கூறியதோடு இப்படி முழுபூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்றதுதான் கோபத்தை உண்டாக்கிற்றென்றும் சொன்னார்' எனச்சொல்லி முடித்தார்.

---

## பிழை திருத்தம்

சென்ற மாத மித்திரன் 226-ம் பக்கத்தில் 'தபால் கட்டணங்கள் மாற்றப்பட்டுள்ளன' என்ற தலைப்பின் கீழ் ½ தோலா எடையுள்ள கடிதங்கட்கு முக்காலணா என்று தவறாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

½ தோலா கடிதங்கட்கு 1 அணா

தபால் விகிதம் செலுத்த வேண்டும். மெல்லிய கவரும், மெல்லிய கடிதமும் உபயோகப்படுத்தினால் ½ தோலா எடையில் 2 லெட்டர் பேப்பர்கள் வரையில் வைக்கக் கூடும்.

---

## ரெவின்யூ ஸ்டாம்பு

இதுவரை சாதாரண ஒரு அணா தபால் தலைகளே பாண்டுகள், ரசீதுகள் இவற்றிற்கு உபயோகப்படுத்துவது வழக்கம். இனி அந்த ஸ்டாம்புகளை உபயோகித்து எழுதப்படும் பாண்டுகளும் ரசீதுகளும் செல்லுபடி யாகாதவைகளாகும். இவைகளுக்கென தபாலாபீசுகளில் விற்கப்படும் ரெவின்யூ ஸ்டாம்புகளையே உபயோகப்படுத்த வேண்டும்.

---

## அநுதாபம்

செங்கற்பட்டு ஜில்லா, மாணம்பதி அ. துரைசாமி முதலியாரவர்கள் சில நாள் காயலாவாக இருந்து சித்திரை மீ 11உ இவ்வுலகம் நீத்தமை கேட்டு மிக வருந்துகிறோம். சில தலைமுறைகளாகத் தொடர்ச்சியாய்ப் படித்துவரும் செல்வாக்குள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். நற்குணமும், தூய ஒழுக்கமும் நிரம்பியவர். மிக்க கண்ணியம் வாய்ந்த இவர் பல ஆண்டுகளாகப் பஞ்சாயத்துக் கோர்ட்டு தலைவராக இருந்து பொது மக்களால் நன்கு பாராட்டப் பெற்றுள்ளார். இவரது ஆன்மா சாந்தியுற வேண்டுகிறோம். (ப-ர்.)

# நமது தபால் பெட்டி

கேள்வி: நமது செங்குந்த மித்திரனைபோன்று மற்ற மரபு முன்னேற்றங் கருதி வெளிவரும் பத்திரிகைகள் இருக்கின்றனவா?

T. M. செங்கோடன்.

பதில்: அநேக பத்திரிகைகள் இருக்கின்றன. பல பத்திரிகைகள் தமது சமூகத்தவரின் ஆதர வின்மையால் பல ஆண்டுகள் நடந்து சமீபத்தில் நின்றுவிட்டன. எல்லாச் சமூகங்களும் தமது சமூக முன்னேற்றத்தினை நாடி பத்திரிகைகள் துவக்கிப் பல ஆண்டுகள் நடத்திய பின்பே, அவர்களைப் பின்பற்றி நமது சமூக அறிஞர்கள் சிலர் செங்குந்த மித்திரனைத் துவக்கினார்கள்.

தற்போது குலாலமித்திரன், சீர்கருணீக விஜயம், ராஜகுலதீபிகை முதலிய சமூகப் பத்திரிகைகள் நடந்து வருகின்றன. யாதவகுல மித்திரன், வன்னியகுல மித்திரன், க்ஷத்திரிய குல மித்திரன், பர்வத ராஜ குல மித்திரன், கருணீக மித்திரன், வேளாள வாலிபன், பிராம்மணன், வைசியகுல மித்திரன் முதலிய அநேக பத்திரிகைகள் வெகுநாட்கள் நடந்து சமீப காலத்தில் நிறுத்தப்பட்டவைகளாம்.

* * *

கேள்வி: சுமார் 5 லட்சம் ஜனத்தொகையுள்ள நம்மரபில் அதிகம் கற்று மேலான பதவியில் இருப்பவர்கள் யாவர்? ஷையார்

பதில்: இந்தக் கேள்வி மிகவும் அவசியமான தொன்றாகும். ஆனால் இதற்குப் பதில் விடுப்பதில்தான் நமது மனம் மிகவும் கூசுகின்றது. உயர்தரப் படிப்புவாய்ந்து பட்டம் பெற்றவர்களாக இருப்பவர் இந்தச் சமூகத்தில் மிகவும் சொற்பமா யிருக்கிறபோது மேலான உத்தியோகங்களி லிருப்பவர்கள் எத்தனைபேர்கள் இருப்பார்களெனச் சொல்ல வேண்டியதில்லை. தற்போது உயர்தர உத்தியோகத்தி லமர்ந்து கெஜட்டட் ஆபீசர்களாக இருப்பவர்கள் நாலைந்து பேர்களே யாவர்.

திரு. A. V. முத்தைய முதலியாரவர்கள் புதுவை பிரெஞ்சு அரசாங்கத்தில் வரவு செலவு இலாகா துணைத்தலைவராக (Secretariate General) இருக்கின்றார். திருவாளர்கள் T. B. கிருஷ்ணசாமி முதலியார், நமசிவாய முதலியார் இருவரும் ஜில்லா கல்வி அதிகாரிகளாக (District Educationel Officers) சேலத்திலும், திருச்சியிலும் இருக்கிறார்கள். திரு. M. B. கந்தசாமி முதலியாரவர்கள் அரசாங்க மின்சார உதவி எஞ்சினீயராக திண்டுக்கல்லில் இருக்கின்றார். இவர்களைத் தவிர திரு ம. சண்முக சுந்தர முதலியார் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக (Asst. Professor of English) வும், திரு. S. மீனாட்சி சுந்தர முதலியார் ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல் தலைமை ஆசிரியராகவும் இருக்கின்றார்கள்.

சென்னை, திரு. P. V. நடராஜ முதலியாரவர்கள் தேவஸ்தான கமிஷனராகவும், சிதம்பரம், திரு. C. பொன்னுசாமி முதலியாரவர்கள் தாசில்தாராகவும், சென்னை திரு. S. P. ஐயாசாமி முதலியாரவர்கள் ஜில்லா போர்டு எஞ்சினீயராகவும் இருந்து சமீபத்தில் விலகி இருக்கிறார்கள். இவர்களைத் தவிர உயர்தர பதவியில் வேறு யாரேனும் இருக்கிறார்களாவெனத் தெரியவில்லை.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

### நிர்வாக சபைக் கூட்டம்

7-5-34-ந் தேதி கூடிய நிர்வாக சபைக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமானவை,

(1) திரு. சு. திருநாவுக்கரசு முதலியார் அவர்களை பிரசாரகராக அமர்த்திக் கொள்ள வேண்டும்.

(2) கைத்தறி நெசவுத் தொழில் வெளிநாட்டுப் போட்டிகளையும், இந்திய மில் போட்டிகளையும் சமாளிக்க முடியாமல் வரவர க்ஷீணித்துப் போவதைக் கருதி நெசவுத் தொழில் புரியும் எல்லா சமூகத்தவர்களு மடங்கிய மகாநாடொன்று நடத்துவதற்கு அந்தச் சமூகத்தவர்களின் சங்கங்களோடும், தலைவர்களோடும் கடிதப் போக்கு வரத்து செய்து பார்க்கவேண்டுமென சங்க அமைச்சரவர்கள் வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

## செங்குந்தர் கல்வி நிதி காப்பாளர் சபை

7-5-34-ந் தேதி கூடிய செங்குந்தர் கல்விநிதி காப்பாளர் சபைக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமானவை.

(1) காப்பாளர் சபையின் சட்டதிட்டங்கள் அங்கீகரிக்கப் பெற்று மேமாத இறுதிக்குள் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

(2) திரு. M. B. கந்தசாமி முதலியார் அவர்கள் உத்தியோக நிமித்தமாக வெகுதூரத்திற்கு மாற்றப்பட் டிருப்பதைக் கருதி தமது காரியதரிசிப் பதவியை ராஜிநாமா செய்ததும், திரு. ம. சண்முக சுந்தர முதலியார் தமது ஆயுள் அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்ததும் அங்கீகரிக்கப்பட்டு இதுவரை இவர்கள் ஆற்றிய தொண்டுக்கு நன்றி பாராட்டப்பட்டது.

(3) திரு. S. T. நடேச முதலியார் அவர்கள் அமைச்சராகவும், திரு. S. குழந்தைவேல் முதலியார் அவர்கள் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(4) திருவாளர்கள் மு. சரவண முதலியார், T. V. அருணாசல முதலியார், M. ராமலிங்க முதலியார், A. சரவண முதலியார் ஆகிய நால்வரும் அங்கத்தினர்களாய்ச் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர்.

---

## அஸ்திவாரக் கல் நாட்டு விழா

1934ளு மேமீ 25உ மாலை 5 மணிக்கு, கோயமுத்தூர் ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட்டின் அஸ்திவாரக் கல் நாட்டு விழா இந்தியா சட்ட சபைத் தலைவர் கனம். ஸர். சண்முகம் செட்டியார், K.C.I.E. அவர்களால் போத்தனூருக்கு அடுத்திருக்கும் மில்லுக்குச் சொந்தமான இடத்தில் மிக விசேடமாக நடத்தப்பெறுமென மில்லின் மானேஜிங் ஏஜண்டுகளும், செக்ரடரிகளுமாகிய வி. எஸ். செங்கோட்டையா அண்ட் பிரதர்ஸ் தெரிவிக்கிறார்கள்.

---

# மதிப்புரை

## ஜலாசய நிர்மாண லட்சண சாஸ்திரம்

புலிவலம், ஸ்ரீ. ஆர். கோபால அய்யரால் இயற்றப்பட்ட 'ஜலாசய நிர்மாண லட்சண சாஸ்திரம்' என்ற புத்தகம் ஒன்று வரப் பெற்றோம். அதில் கிணறு வெட்டுதற்குரிய இடங்களைக் கண்டுபிடித்தல், எந்தெந்த இடத்தில் என்னென்ன வகையான நிறமும் ருசியுமுள்ள நீர் இருக்குமென் றறிதல், பூமியின் கீழ் எவ்வளவு ஆழத்தில் நீர் மட்டம் இருக்கிறதென்றும் நீர் தாரைகளின் ஓட்டம் எந்தப் பக்கமாயிருக்கிறதென்றும் கண்டுபிடித்தல் ஆகிய அநேக விஷயங்கள் தெளிவாய் விளக்கப்பட் டிருக்கின்றன. இந்நூல், பிரிஹத் சம்ஹிதா, மாயன் மதம் முதலிய பல நூல்களின் விஷய உணர்ச்சியினையும், ஆசிரியரின் நீண்ட அனுபவத்தினையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. பிழையின்றி தெளிவாய் அச்சிடப்பெற்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய நூலென்றே கருதுகிறோம். விலை அணா எட்டு. வேண்டுவோர், ஆர். கோபாலய்யர், புலிவலம், விஜயபுரம் போஸ்ட், தஞ்சாவூர் ஜில்லா என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

---

## செங்குந்தர்களின் உபகாரச் சம்பள விஷயமாக செங்கற்பட்டு ஜில்லா கல்வி அதிகாரி 1930-ம் ஆண்டில் பிறப்பித்துள்ள அறிக்கை

Office of the District
Educational Officer,
Chinglepet.

Dis. No. 444.

Dated 17th November, 1930.

SUBJECT :—Communities distinction between Sengunthar and Kaikolar.

Headmasters of Secondary Schools in the district are informed that educational concessions admissible under Rule 92 of the Madras Educational Rules may be given to pupils belonging to Sengunthar community as the names,

*Sengunthar and Kaikolar refer to the same community.*

(By order)

(Sd.) K. S. Kuppusamy Iyer,
for District Educational
Officer, Chinglepet.

செங்கற்பட்டு ஜில்லா கல்வி அதிகாரி காரியாலயம், 17-4-30 தேதியுள்ள ஜில்லா 444 நெ.

விஷயம்: 'செங்குந்தர்', 'கைக்கோளர்' என்ற ஜாதி விளக்கம்.

'செங்குந்தர்', 'கைக்கோளர்' என்ற பெயர்கள் ஒரே சமூகத்தைக் குறிப்பதால், சென்னை கல்விச் சட்டம் 92-வது பிரிவுப்படி அனுமதிக்கத்தக்க கல்வியுபகாரச் சம்பளமானது செங்குந்த மாணவர்களுக்கும் வழங்கத்தக்கதாகுமென்பது இந்த ஜில்லாவிலுள்ள உயர்தர பாடசாலைத் தலைமை ஆசிரியர்கட்கு அறிவிக்கப்படுகிறது.

(உத்தரவுப்படி)

(ஒப்பம்) கே. எஸ். குப்புசாமி அய்யர்.

செங்கற்பட்டு ஜில்லா
அதிகாரிக்காக

# வ ர் த் த மா ன ம்

## சென்னை மார்க்கட்டு நிலவரம்

19—5—34

### நூல் தினுசுகள்

| செ. | ராத்தல் | நூல் ரகம் | விலை |
|---|---|---|---|
| 40 | 5 | டாக்கிரி | ரூ. 3- 8-0 |
| ,, | 5 | சலவை எனிடிக்கட் | ரூ. 4- 8-6 |
| ,, | 5 | சலவை நாக கன்னிகை | ரூ. 4- 6-0 |
| ,, | 10 | ஜப்பான் கலர் பந்து | ரூ. 6-15-6 |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 3- 2-0 |
| 30 | 5 | லாயல் மில் | ரூ. 2- 9-0 |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 2-10-0 |
| 20 | 10 | மதுரை மில் | ரூ. 4- 2-0 |
| 20 | 10 | ஸ்டேன்ஸ் மில் | ரூ. 8- 4-0 |
| 20 | 10 | லாயல் மில் | ரூ. 3-15-0 |
| 60 | 5 | சீமை எருதுகாரம் | ரூ. 5- 7-0 |
| 60 | 5 | சிகப்பு அசல் மயில் | ரூ. 9-12-0 |

### ஜவுளிகளின் விலை

| | | | |
|---|---|---|---|
| 22 x 22 | காரிகன் மல் | கிரிப்பாம்பு (பி.) | ரூ. 6- 5-0 |
| ,, | ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5-10-0 |
| ,, | சலவை மல் | கிரிப்பாம்பு | ரூ. 6-15-6 |
| ,, | ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5-12-0 |
| 1703-ம் | நெம்பர் மல் | | ரூ. 9- 2-0 |
| 9000 | கிளாஸ்கோ மல் | | ரூ. 9- 1-0 |

சவரன் 1-க்கு ரூ. 21- 4-6
வெள்ளி ரூபா எடை ரூ. 0- 9-3

### கப்பல் செய்திகள்

| | | | |
|---|---|---|---|
| S. S. எதியோப்பியா | ரங்கூனுக்கு | 25-5-34 | காலை 10 மணி |
| S. S. எரின்பூரா | ,, | 1- 6-34 | ,, |
| S. S. ரஜூலா | ஸ்ட்ரெயிட்ஸுக்கு | 2- 5-34 | மாலை 4 மணி |
| S. S. ரோணு | ,, | 5- 6-34 | ,, |

---

## தமிழ் நாட்டு நடப்பு

### காஞ்சீபுரம் ஸ்ரீ அறம்வளர்த்த ஈசுவரர் மகா கும்பாபிஷேகம்

காஞ்சீபுரத்தில் ஸ்ரீ அறம்வளர்த்த ஈசுவர ஆலயத்திற்கு இன்றியமையாது செய்யவேண்டிய திருப்பணி செய்யப் பெற்று நிகழும் பவஹு வைகாசி மீ 5உ (18-5-34) வெள்ளிக்கிழமை காலை 7¾-மணிக்கு



மேல் 9¾-மணிக்குள்ளாக அறம்வளர்த்த ஈசுரருக்கும், அறம்வளர்த்த நாயகிக்கும் மகா கும்பாபிஷேகமும், மாலை திருக்கல்யாணமும், வீதி உற்சவமும் நடைபெற்றன. அன்று மாலை 6-மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளால் மீனாக்ஷி திருமண உபந்யாசம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் தரிசித்தும் கேட்டும் இன்புற்றனர்.

### வடதிருநாகேஸ்வரம் ஸ்ரீ சேக்கிழார் பெருமான் மகோற்சவம்

பெரிய புராணத்தை உலகுக்கு உபகரித்த ஸ்ரீ தெய்வச் சேக்கிழார் பெருமானுக்கு நிகழும் பவஹு வைகாசி மீ 6உ சனிக்கிழமை மகோற்சவம் நடைபெற்றது. அதை முன்னிட்டு அதற்கு முன்பு சித்திரை மீ 28உ முதல் வைகாசி மீ 5உ வரையில் தினந்தோறும் மாலை 6-மணிக்கு சைவப்பிரசங்கங்கள் நடைபெற்றன. அனைவரும் கண்டும் கேட்டும் பேரானந்த முற்றனர்.

### சென்னையின் புதிய சட்ட மெம்பர்

சென்னை அரசாங்கத்தின் சட்ட மெம்பராக இருந்து விலகும் ஸ்ரீ. ஸர். கிருஷ்ணன் நாயருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ள ஸர். கே. வி. ரெட்டி நாயுடு காரு 25-4-'34-ந் தேதி தமது பதவியை ஏற்றுக் கொண்டார்.

### பாவலர் பிரிந்தார்

சென்னை ஆஸ்திக சங்கத்தின் தலைவரும், வெம்பிளி எக்ஸிபிஷனுக்குச் சென்று திரும்பியவருமான சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப் பாவலரவர்கள் 28-4-'34-ந் தேதி காலமானார்.

### துப்பாக்கி லைஸென்ஸ் இல்லை

சென்னையிலும், சென்னை மாகாணத்திலும் இனி துப்பாக்கி வைத்துக்கொள்ள லைஸென்ஸ் வழங்குவதில்லையென்று சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

### சென்னை—அமெரிக்கா டெலிபோன்

சென்னைக்கும், அமெரிக்காவுக்கும் டெலிபோன் அமைத்தாகி விட்டது. சென்னையிலுள்ள ஒரு கம்பெனியார் நியூயார்க்கிலுள்ள தமது ஏஜெண்டுடன் 4 நிமிட நேரம் பேசினர்.

### துறையூர் அம்மனுக்கு 144

திருச்சி ஜில்லா துறையூர் மாரியம்மன் திருவிழாவில் உடையார் சமூகமும், செங்குந்த முதலியார் சமூகமும் சில மாமூல் பழக்கங்களை விட்டுக்கொடுத்து மாரியம்மன் திருவிழாவை நடத்த பிரியப்படாததால் அத்திருவிழா நடக்கக் கூடாதென 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட் டிருக்கிறது.

### கருங்குழி பார்ஸல் வழக்கு

இவ்வழக்கில் ராமானுஜ அய்யங்காருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

### சென்னையில் சயாம் அரிசி இறக்குமதி

எப்ரல் 19-ந் தேதி சென்னை கடற்கரையில் 800 டன் நிறையுள்ள 8,000 மூட்டை சயாம் அரிசி இறக்குமதியாயிற்று.

### புதுக்கோட்டையில் தீக்குச்சி வரி

பல உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்கள் எதிர்த்தும் புதுக்கோட்டை சமஸ்தான சட்ட சபையில் தீக்குச்சி வரி மசோதா நிறைவேறிவிட்டது.

### சென்னை சதிவழக்குத் தீர்ப்பு

10 மாதகாலமாக விசாரணையிலிருந்த சென்னை சதிவழக்கு 24-4-34 மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. இவ்வழக்கில் செஷன்ஸ் விசாரணை 68 நாட்கள் நடந்தன. நீதிபதி 4½ நாட்கள் வரை வழக்கின் விவரத்தை ஜூரர்களுக்கு எடுத்துக் கூறினர்.

பெரும்பாலான ஜூரர்களின் அபிப்பிராயத்துக் கிணங்க சபாபதி, பட்டணம் பானு ரெட்டி, சேஷய்யா மூவரையும் விடுதலை செய்து விட்டு மற்றவர்களில் முகுந்தலால் சர்க்காருக்கு 4 வருட கடினகாவல் தண்டனையும், கண்ணாயிரம், ஜோசப், கண்ணன், லோகநாதன், பலராம ரெட்டி, காளைய செட்டி, நாராயண நம்பி, மதுரை ரெங்க ராஜய்யங்கார், ராமாநந்த சௌத்திரி, பாபுராஜூ இவர்களுக்கு தலா மூன்று வருட கடினகாவலும், அருணாசலம், கோபால சாஸ்திரி, பாலகிருஷ்ண ரெட்டி, தசரதராம ரெட்டி, டி. ஆர். சுப்பிரமணியம் இவர்களுக்கு தலா ஒருவருட கடுங்காவலும் நீதிபதி விதித்தார்.

### போலீஸ் கமிஷனர் உத்தரவு

இந்த வருடமுதல் பழைய பஸ்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப் படமாட்டாதென்றும், எனவே கமிஷனர் உத்தரவின்றி 'ஜி' பெர்மிட் வாங்கக் கூடாதென்றும் சென்னை நகர கமிஷனர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### தர்மவான்கள் இல்லையா

ஆரணியில் பச்சையப்பன் என்ற ஆதி இந்து 'ஏழைகளைக் காப்பாற்றுவோர் இல்லையா? தர்மவான்கள் இல்லையா? இந்த ஊரில் இந்தக் கொடும் வெய்யிலில் தண்ணீர்ப்பந்தல் வைப்போர் இல்லையா? மோர் தாகத்துக்குக் கொடுப்போரில்லையா?' என்று தண்டோரா போட்டுக் கொண்டே கதறிக்கொண்டு சென்றானாம். இவனுக்கு 13 பிள்ளைகள் இருக்கிறார்களாம்.

### கார்போரேஷன் புதிய ரேவின்யூ அதிகாரி

சென்னை கார்பொரேஷன் ரெவின்யூ அதிகாரியாக ஸ்ரீ S. சுப்பிரமணியஞ் செட்டியார் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

### சென்னை வைஸ் சான்ஸலர்

சென்னை, சர்வகலாசாலையின் வைஸ் சான்சலராக ஸ்ரீ ஆர். விட்டில் ஹெயில்ஸ் நியமிக்கப் படலாமெனத் தெரிகிறது.



### செங்கற்பட்டு ஜில்லாபோர்டு பிரிவினை

முதன்முதலாக பரீட்சார்த்தமாக செங்கற்பட்டு ஜில்லாபோர்டை பிரிப்பதென்றும், செங்கற்பட்டு, மதுராந்தகம், காஞ்சீபுரம் தாலூக்காக்களை ஒருபோர்டாகப் பிரித்து கருங்குழி அல்லது செங்கற்பட்டில் அதன் காரியாலயத்தை வைப்பதென்றும், சைதாப்பேட்டை, திருவள்ளூர், ஸ்ரீ பெரும்புதூர், பொன்னேரி தாலூக்காக்களை ஒரு போர்டாகப் பிரித்து அதன் காரியாலயத்தைச் சைதாப்பேட்டையில் வைப்பதென்றும் போக்ஸ் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த போர்டுகள் எப்படி வேலை செய்கிறதென 6 மாதகாலம் பார்த்த பின்பே மற்ற போர்டுகள் பிரிக்கப்படும்.

### சர். உஸ்மான் கவர்னர் பதவி

சென்னை மாகாண ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள சர். மகமத் உஸ்மான் மேமீ 16-ல் கவர்னர் மாளிகையில் பதவி ஏற்றார். பின்பு, சென்னை உயர்தர நீதிமன்றத்தின் சீனியர் நீதிபதியான ஸ்ரீ மாதவன் நாயர் முன்பாக ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்தார்.

### வீரவநல்லூரில் முதலியார் வெற்றி

வீரவநல்லூரில் பஞ்சாயத்து போர்டு கூட்டங்கள் மூன்றுக்குத் தொடர்ந்து வராததால் அவர் தமது பதவியை இழந்துவிட்டதாகத் தலைவர் தெரிவித்துவிட்டார். மூன்று கூட்டங்களில் ஒன்றுக்குத் தமக்கு நோட்டீஸ் கிடைக்கவில்லையென சமாதானம் கூறியும் போர்டார் அவரை மெம்பராக எடுத்துக்கொள்ள மறுத்ததால் ஜில்லா நீதிபதியிடம் முதலியார் மனு செய்துகொண்டார். நீதிபதி அவர் பதவியை இழக்கவில்லையெனத் தீர்ப்பளித்தார். போர்டு தலைவர் அத்தீர்ப்பை எதிர்த்து ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் ஸ்ரீ முதலியாருக்கு அனுகூலமாக கீழ்க்கோர்ட்டு தீர்ப்பே உறுதி செய்யப்பட்டு அப்பீல்மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

### டெலிபோன் கட்டணக் குறைவு

சென்னை டெலிபோன் கம்பெனியார் டெலிபோன் கட்டணத்தைக் குறைக்க யோசனை செய்து வருகிறார்கள்.

### பெங்களூர் கண்டோன்மெண்டு

பெங்களூர் கண்டோன்மெண்டை மைசூர் சர்க்காருக்குக் கொடுத்துவிடுவதென பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

### கும்பகோணத்தில் வாஜபேய யாகம்

செங்காலிபுரம், பண்டித நாராயண தீக்ஷிதர் என்பவர் 16-5-'34 தேதி முதல் கும்பகோணம் ஸ்ரீ சங்கராச்சாரியார் மடத்தில் வாஜபேய மகாயாகம் நடத்தத் தீர்மானித்திருக்கிறார். இந்த யாகத்தில் சுமார் 30 ஆடுகள் பலியாகுமாம்.

### சென்னை கிரவுன் பிராஸிகூடர்

அட்வகேட், திரு. பீ. எஸ். அநந்தராமன் என்பவர் சென்னை கிரவுன் பிராஸிகூடராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## இந்தியச் செய்திகள்

### உபயதுல்லா விரத முடிவு

78 நாள் உண்ணா விரத மிருந்தபின் எல்லைப்புற காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ உபயதுல்லாகான் தமது உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டார். தம் உடல் நலத்திற்காக முல்டான் சிறையி லிருந்து காயல்காட் சிறைக்கு மாற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டதற்கு சர்க்கார் இணங்காமையே உண்ணா விரதத்திற்குக் காரணம். 78 நாள் பட்டினிக்குப் பின் சர்க்கார் இதற்கு இணங்கியதால் 17-4-'34-ந் தேதி மாலை ஒரு கோப்பை பாலும், எலுமிச்சம் பழச் சாறும் முதன்முதலாக உட்கொண்டு உண்ணா விரதத்தை முடித்துக்கொண்டார்.

### ஆதித்திராவிடர்களுக்கு ஆலயம் திறக்கப்பட்டது

காசி, காமகோடிபீடம் சங்கராச்சாரியார் தமக்குச் சொந்தமான சகதேவ மடத்தின் ஆலயத்தையும், அதைச் சேர்ந்த பிரதேசத்தையும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட்டனராம்.

### ஆச்சரியமான மனிதர்

சோனிப்பூரில் காந்தியடிகட்கு அளித்த வரவேற்பைப் பார்த்து ஆச்சரியப்பட்ட ஐரோப்பியர் ஒருவர் 'மிகவும் ஆச்சரியமான மனிதர்; ஜனங்களின் உண்மையான ராஜப்பிரதிநிதி இவரே' எனக் கூறினராம்.

### சாரதா சட்டப்படி தண்டனை

ஆமதாபாத்தில் ரம்ஜான்பாய் என்பவர் 12 வயது பெண்ணை மணந்ததற்காக சாரதா சட்டப்படி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் 100 ரூபா அபராதம் விதித்தார். இத்திருமணத்திற்கு உடந்தையாக இருந்த ஒரு வக்கீல் 150 ரூபாய் அபராதம் விதிக்கப்பெற்றார்.

### ஆதி இந்துக்களுக்காக அர்ச்சகரின் விரதம்

கராச்சிக்கு சமீபமாக உள்ள தாலார் கிராமக் கோயிலில் 21-4-'34-ந் தேதி அர்ச்சகர் ஆதி இந்துக்களை அனுமதித்தார். இதை தர்மகர்த்தா தடுத்து ஆதி இந்துக்களை வெளியில் அனுப்பிவிட்டார். தர்மகர்த்தாவின் செய்கையைக் கண்டிக்கும் பொருட்டு அர்ச்சகர் உண்ணா விரதம் இருந்து வருகிறாராம்.

### சர். பி. எல். மித்திரருக்குப் பதவி

சர். பி. ஸி. மித்திரர் காலமானதால் அவருக்குப் பதிலாக சர். பி. எல். மித்திரரை வங்காள நிர்வாகசபை அங்கத்தினராக நியமித்திருப்பதை சக்கிரவர்த்தி அங்கீகரித்துவிட்டார்.

### பம்பாய் கார்பொரேஷன் தலைவர்

16-4-'34-ந் தேதி நடைபெற்ற பம்பாய் கார்பொரேஷன் தலைவர் தேர்தலில் ஸ்ரீ ஹுஸேன்பாய் ரஹிம்துல்லா வெற்றி பெற்றார்.

### இந்திய—ஜப்பான் ஒப்பந்தம்

19-4-'34-ந் தேதி மாலை 6 மணிக்கு இந்திய ஜப்பான் ஒப்பந்தத்தில் இருதேசப் பிரதிநிதிகளும் பூர்வாங்கமாகக் கையெழுத்திட்டனர்.



### கோரக்பூரில் ரத்தமழை

கோரக்பூரில் 20-4-'34-ந் தேதி இரவு மழை பெய்தது. மறுநாட் காலை தரை முழுதும் சிகப்பாய் காணப்பட்டது. அதிகாரிகளின் அறிக்கை ரத்தமழை பெய்ததாகக் கூறுகிறது. ரத்தத்துடன் கூடிய மண்ணை கெமிகல் பரீட்சகருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

### ஸ்ரீ தேவதாசுக்குப் பெண் குழந்தை

மகாத்மா காந்தியின் மகனும், குட்டிக் காந்தியாகிய சக்கிரவர்த்தி ராஜகோபாலாசாரியாரின் மருமகனுமான ஸ்ரீ தேவதாஸ் காந்திக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது.

### சூரிய உஷ்ண சிகிச்சை

க்ஷயரோகம், பாரிசவாயு முதலிய நோய்களை சூரிய உஷ்ணத்தைக்கொண்டே குணப் படுத்துவதற்காக ஜாம் நகரில் ஒரு ஆஸ்பத்திரி கட்டி வருகிறார்கள்.

### மனைவியை மாடாக ஓட்டிய கணவன்

பேராரில் அகோலாவுக்கடுத்த மண்டகன் கிராமத்தில், மராட்டியன் ஒருவன் தன்னுடைய மாமனாருடன் சண்டை பிடித்துக்கொண்டு அதற்கு தண்டனையாக தன் மனைவியை ஒரு மாட்டுடன் நுகத்தில் பூட்டி, கடைவீதி வழியாகத் தார்முள்ளால் குத்தி காளை மாட்டுடன் ஓடும்படி இம்சை செய்தான். இதைப் பார்த்த கிராமத்து ஜனங்கள் பொறுக்க முடியாமல், போலீஸ் உதவிகொண்டு பெண்ணைக்காப்பாற்றினர். விஷயம் போலீசு விசாரணையில் இருக்கிறது.

---

## வெளியுலகப் போக்கு

### 1000 வருட பூர்த்தி விழா

கெய்ரோவில் எல் அஜார் மசூதிகட்டி சுமார் 1000 வருடங்கள் ஆகின்றன. எனவே, ஆயிரவருட பூர்த்திவிழா கொண்டாட ஏற்பாடு செய்து வருகின்றனர்.

### அதிக மகிழ்ச்சியால் புத்தி கலங்கியது

ஜுராவில் ஒரு ஏழைப்பெண், தனக்கு ஒருவர் 60000 பவுன் உயில் எழுதிவைத்தார் எனக்கேள்விப்பட்டதும் புத்திகலங்கி நதியில் குதித்து தற்கொலை செய்துகொண்டாள்.

### ஹிட்லருக்கு ரஷ்ய எதிர்ப்பு

ஜெர்மனியில் ஹிட்லர் எந்தப் புத்தகங்களைப் பறிமுதல் செய்து தீக்கிரையாக்கினாரோ அதே புத்தகங்களை மாஸ்கோவில் பகிரங்கமாக ஒரு புஸ்தகசாலையில் காட்சிக்கு வைத்துள்ளனர்.

### ஜப்பான் இளவரசர்

ஜப்பான் தேசத்தின் முடிக்குரிய இளவரசர் சமீபத்தில் பிறந்தார். அவரை வளர்க்கும் செவிலியாக யுத்தப்படை அதிகாரியின் மனைவியாகிய ஸ்ரீமதி, யோஜிகோ ஹகூச்சி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஜப்பான் தேசத்தில் மிகவும் உடல் நலம் வாய்ந்த இரு பெண்களில் இவர் ஒருவர்.

### இந்தியா மந்திரிமீது குற்றம்

பார்லிமெண்டு உரிமைகளுக்கு பாதகரமான முறையில் இந்தியா மந்திரி ஸர். ஸாமுவேல் ஹோர் நடந்துகொண்டதாக சர்ச்சில் புகார் கூறியதின்மீது அதைப்பற்றி விசாரிக்க பார்லிமெண்டு ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது.

### ஐரிஷ் ஸெனேட் சபை ரத்து

ஐரிஷ் ஸெனேட் சபையை ஒழித்துவிடவேண்டுமென டிவேலரா கொண்டுவந்த மசோதா 18-4-'34-ந் தேதி பெரும்பான்மையான ஓட்டுகளால் இரண்டாம் முறையாக நிறைவேறியது.

### ஹிட்லரின் விலைமதிப்புடைய நூல்

ஹிட்லர் தம் கையால் எழுதிய சிறந்த புத்தகம் ஒன்றை ஜெர்மன் காட்சியில் வைத்திருக்கிறார்கள். 1932ல் ஹிட்லர் பவேரியாவிலுள்ள ஒரு சிறையி லிருந்தபோது அதை எழுதினார்.

### ஜார்ஜ் மன்னரின் ஜூபிலி

ஜார்ஜ் மன்னருக்கு பட்டாபிஷேகம் நடந்து அடுத்த வருஷத்துடன் 25 வருடமாவதால் 25-ம் வருட கொண்டாட்டத்தை ஏகாதிபத்திய சம்பிரதாயப்படி மிகச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்படுகிறது.

---

## WISE WARNINGS
## அறிஞர் எச்சரிக்கை

A. S. ராமசேஷன், கோவை

### உலகின் ஏழு ஆபத்துக்கள்

1. Politics without principles.
   கொள்கை யற்ற ராஜீயம் அல்லது அரசியல்.
2. Wealth without work.
   உழைப் பற்ற செல்வம்.
3. Pleasure without conscience.
   மனச்சாட்சிக் கேலாத மகிழ்ச்சி.
4. Knowledge without character.
   நற்குண மில்லா அறிவு.
5. Industry without morality.
   ஒழுக்க மற்ற தொழில்முயற்சி.
6. Worship without sacrifice.
   தியாக மில்லா பூஜை.
7. Science without humanity.
   இரக்க மற்ற விஞ்ஞான வளர்ச்சி.


## அரை வார்த்தைகள் போட்டி பந்தயம்

## ரூ 1025 ரொக்கப்பரிசு

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | (சரியான விடைக்கு) | ரூ. 500 |
| 2-வது பரிசு | (ஒரு தவறுள்ள விடைக்கு) | ரூ. 300 |
| 3-வது பரிசு | (இரண்டு தவறுகள் உள்ள விடைக்கு) | ரூ. 200 |
| தனிப் பரிசு | (முதலில் வந்து சேரும் சரியான விடைக்கு) | ரூ. 25 |

குறிப்பு :—இந்தப் போட்டியில் இரண்டு தவறுகள் உள்ள விடைகளுக்கும் பரிசு உண்டு என்பதையும், முதலில் வந்து சேரும் விடைக்கு பிரத்தியேகமாக ஒரு தனிப் பரிசு அளிக்கப்படும் என்பதையும் கவனிக்கவும்.

### பிரவேசக் கட்டணம் 8 அணா


விடைகள் கூபனிலும் வெறுங் காகிதத்திலும் எழுதி யனுப்பலாம்

விடை கண்டுபிடிக்கும் விதம் :—அடுத்த பக்கத்தில் ஒன்பது தமிழ் அரை வார்த்தைகள் அச்சிடப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு வார்த்தையிலும் அடிப் பாகம் பாதி மறைக்கப்பட்டிருக்கிறது. முதல் வரியில் காட்டியபடி ஒவ்வொரு எழுத்தையும் பூர்த்தி செய்தால் முழு வார்த்தை கிடைக்கும். முதல் வரியிலுள்ள வார்த்தை விநாயகர். இவ்வாறே ஒவ்வொரு வரியிலுமுள்ள எழுத்துக்களையும் பூர்த்தி செய்து எல்லா வார்த்தைகளையும் கண்டுபிடித்து வரிசைக் கிரமமாக கூபனிலோ வெறுங் காகிதத்திலோ எழுதி யனுப்பவேண்டும்.

#### நிபந்தனைகள்

1. ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணா 8, பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணா எட்டு செலுத்துவதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதையும் விடையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

அரை வார்த்தைகள் போட்டிப் பந்தயம்





அரை வார்த்தைகள் போட்டிப் பந்தயம்

முடிவு தேதி 25-6-34

விடை கூபன்

1. விநாயகர்
2.
3.
4.
5.
6.
7.
8.
9.

(செங்குந்த மித்திரன்)

இந்த அரை வார்த்தைகள் போட்டியில் கலந்துக் கொள்வதில் மானேஜர் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப்படுத்துவதென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர்

விலாசம்

ஜில்லா

2. மணியார்டர் கூபனிலும், விடை யனுப்பும் கவர் மேலும் விடையனுப்புபவரின் முழு விலாசத்தை தெளிவாய் எழுதுவதோடு "அரை வார்த்தைகள் போட்டி" என்றும் குறிப்பிடவேண்டும். விடைகளை தனித் தனி எழுத்தாக தெளிவாய் எழுதவேண்டும்.

3. மானேஜர், ஆபீஸில் ஸீல் செய்து வைத்திருக்கும் விடைக்கு எழுத்துக்கெழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதற்பரிசும், அடுத்தபடி ஒரு தவறுள்ள விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும், அதற்கடுத்தபடி இரண்டு தவறுகள் உள்ள விடை அனுப்புபவருக்கு மூன்றாவது பரிசும் அளிக்கப்படும். அதிக விடைகள் வந்தால்

பரிசுத் தொகையை பகிர்ந்தளிக்கப்படும். மேலும் முதலில் வந்து சேரும் சரியான விடைக்கு ரூ. 25. தனிப் பரிசும் அளிக்கப்படும்.

4. எவருமே சரியான விடையனுப்பாவிட்டால் கூடியவரை சரியான விடை யனுப்பியவருக்கு முதல் பரிசும், மற்ற பரிசுகள் இதே முறையில் அளிக்கப்படும். பரிசளிக்கும் விஷயத்தில் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

5. இந்தப் போட்டியில் ஒருவர் ஒன்றுக்கு மேல்பட்ட பரிசுகள் பெறலாம். முதற் பரிசு பெறுபவர் இரண்டாவது மூன்றாவது பரிசுகளும் பெறலாம். பலர் சேர்ந்து தங்களுடைய விடைகளை ஒரே கவரில் அனுப்பலாம். அத்தகைய விடைகளுக்கு பிரவேசக் கட்டணங்களை ஒன்றுசேர்த்து ஒரே மணியார்டராக அனுப்பலாம்.

6. விடைகள் 25-6-34 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். இந்த தேதிக்குப் பிறகு வந்து சேரும் விடைகள் கவனிக்கப்படமாட்டா. குறிப்பிட்ட வாய்தாவுக்குள் விடைகள் கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

விலாசம் :— மானேஜர்,
வித்யா போட்டி நிலையம்,
மல்லூர் P. O., சேலம்.


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் ஏதாவதொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரமும் சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போதும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"'இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:— "எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி வி. கே. சடகோபாச்சாரியார்,
ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா.